॥ श्रीः॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः॥

# ஶ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவ திவ்யபாதுகாஸேவக ஶ்ரீமதபினவ வாகீஶ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால தேசிகனின் அஷ்டோத்தர ஶதநாமாவளி

ஶ்ரீமான் உ.வே. மஹாமஹோபாத்யாய, வாக்தேவிவரபுத்ர,
ஸாங்கஸலக்ஷனகனபாடி டா.ஏ.எஸ். வேங்கடநாதாசார்ய ஸ்வாமி

---

ஹயாஸ்யகுலமாலோகம் வேங்கடேஶகவிர்முதா |
அஷ்டோத்தரஶதம் நத்வா நவ்யவாகீஶயோகிநம் ||

யோகிநே மந்த்ர ஸித்தாய ஹயாஸ்யபதஸேவிநே |
தபோநிஷ்டாய தீராய துரீயபதலக்ஷ்மநே ||1||

தாந்தாய பரமார்த்தாய க்ருதிநே குணிநே நம: |
யமிநே பாரலக்ஷ்யாய பரமைகாந்திநே யதே ||2||

போதகாயார்த்திலக்ஷ்யாய ஸாங்க்யாயா மிததேஜஸே |
ஸதே ஸ்திராய ஸித்தாய ப்ரஹ்மநிஷ்டாய பூயஸே ||3||

த்ரய்யந்தார்த்தாய நாதாய தாரகாய மஹாத்மநே |
ஶ்ரீமதே முநேயேத்மகாதபகவத்பக்தி ஸிந்தவே ||4||

வைராக்யநிதயே சாஸ்த்ரே விவேக-ஸ்வப்ரகாசிநே |
ஹம்ஸாய பரமஹம்ஸாய தத்த்வவேத்ரே தயாளவே ||5||

தேஶிகாயாத்மலோகாய ப்ரஹ்மதண்டாய தண்டிநே |
ஆத்யாத்மதீக்ஷிதாயாஸ்மை புருஷாய பராத்மநே ||6||

மங்களாய ஸ்வஸாத்யாய ஸாதநாய ப்ரகாரிநே |
ஸத்த்வாய தீமதே போக்த்ரே குருபாவாநுராகிநே ||7||

ஸ்வாத்யாயபதநிஷ்டாய பஞ்சகாலப்ரகாசிநே |

ஸவநத்ரயநிஷ்டாய ஶிஷ்யசித்தாபஹாரிநே ||8||

தீக்ஷ்நாய ம்ருதவே தாத்ரே விதாத்ரே தீர்கபந்தவே |
அநகாய ஸ்மிதாஸ்யாய ஸ்வ-பர-ந்யூந-தர்சஶிநே ||9||

ஶ்ரீதண்டாய ந்ருஸிம்ஹாய ராக்ஞே ராஜஸ்வதண்டிநே |
லக்ஷ்மநார்யாத தத்த்வாய வேதமார்கவிதாயிநே ||10||

அர்த்தபஞ்சகலக்ஷ்யாய ஸந்ந்யாஸாஷ்ரமரூபிநே |
ஹயாஸ்யார்ச்சாவிதாநாய த்ரிதண்ட ஸ்வப்ரமாயுஜே (ப்ரமாபுஜே) ||11||

ஊர்த்வமூலோர்த்வபுண்ட்ராய யஞஸூத்ராநு ஶாஸிநே |
நவ்யரங்கேந்த்ர ஶிஷ்யாய நவ்யலக்ஷ்மணபீக்ஷவே|| 12||

பரகாலபதேஶாய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரிநே |
த்ரிகால ஞானயக்ஞாய ஞானாத்வர்யவபாஸிநே ||13||

ஸ்வாபஹர்த்யபகாராய ஸ்வாபகர்த்ரனுராகிநே |
நிர்தவந்த்வாய ஸ்வதந்த்ராய ஸத்யஸந்தவ்ரதாத்மநே ||14||

பாதுகார்சனதீக்ஷாட்யராஜஸத்மப்ரபாஸ்வதே |
ராஜஸ்வபத்ம மித்ராய பாரதாயார்ஷபாகிநே ||15||

நிர்விசேஷவிசேஷார்த்த தத்த்வபூம்யனுஷங்கிநே |
பக்திப்ரபத்திதத்த்வார்த்த ப்ரமாநுஷ்டானலக்ஷ்மநே ||16||

ஸ்வச்சந்தவ்ருத்தநிஷ்டாய ஸ்வார்த்தச்சந்தப்ரவர்த்திநே |
விஷ்வாமித்ரான்வயார்காய சேதநாய விபஶ்சிதே ||17||

ரங்காஸாரவிஹாராய ஶ்ரீநிவாஸவிஹாரிநே |
ஶ்ரீநிவாஸாத்த தீக்ஷாய சடகோபாப்த மந்த்ரிநே ||18||

க்ருஷ்ணமார்யக்ருபாப்ராப்த மந்த்ரதீக்ஷா ப்ரமாவதே |
த்ராவிடாம்நாய ஸூக்த்யர்த்த மாதுர்யாஸ்வாதகாரிநே ||19||

யுவோத்பவவஸந்த்யாட்ய மதுலோகவிராட்யுஜே |
பூஷாநபூ அலக்ஷ்யார்கமஹர்ஷி பதபோகிநே ||20||

சிதசித்பரதத்வார்த்த்த வ்ரதஷட்பத சாரிநே |
பவச்சிதே, ஸ்வபந்தாய பந்தத்ரயவிவேகிநே ||21||

சரணாகத ரக்ஷைகசங்கல்பாய ச்வசக்ஷுஷே |
வேதவேதாந்த தீபாய ஞானசூடாஸ்வபோதிநே ||22||

ஸ்ரீபாஷ்யபாவபோதார்த்த ப்ரபாமண்டலலாஸிநே |
ரஹஸ்யத்ரயஸாரார்த்த க்ரஹநோஜ்வலகாந்தயே ||23||

வாகீஶபதலக்ஷ்யாய நவ்யவாகீஶயோகிநே |
ஸ்ரீஹயாஸ்ய பதத்வந்த்வ வ்ருத்தகோத்ரநிவாஸிநே ||24||

வ்யதநோத்வேங்கடோநாத இத்தமஷ்டோத்தரம் ஶதம் |
வாகீஶநவ்யவாகீஶ க்ருபாமுத்ராத்ம லக்ஷ்மந: ||

**ஸ்ரீத்ரிதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி அருளிய வாழித்திருநாமம்**

**எம்பெருமானார்**

சீராரும் பெரும்பூதூர் சிறக்கவந்தோன்வாழியே
சித்திரையில் ஆதிரைநாள் செகத்துதித்தோன்வாழியே
ஆராதவருளாளர் அருளுடையோன்வாழியே
அருமறைசொல்பெரியநம்பி அடிபணிந்தான்வாழியே
ஏராரும் பாஷியத்தை யீன்றபிரான்வாழியே
எழுபத்துநால்வரையும் எமக்களித்தான்வாழியே
ஓராதபரசமயக்குறும்பறுத்தான் வாழியே
ஒளிதிகழுமெதிராசர் இணையடிகள்வாழியே

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

# ஸ்ரீபரகாலமடமும் நாவல்பாக்கமும்

ஸ்ரீமதுபயவே வித்வான் மஹாமஹோபாத்யாய நாவல்பாக்கம் சடகோப ராமாநுஜதாதாசார்ய ஸ்வாமி.

---

நூறு அல்லது நூற்று இருபது வருஷங்களுக்கு முன்பு சுரோத்ரியம் நாவல்பாக்கம் கிராமத்தில் உதித்த வித்வான்களுக்கு மைசூர் பரகாலமடத்திலிருந்த ஸ்வாமிகளுடனும் வித்வான்களுடனும் இருந்த தொடர்பைச் சற்று விளக்குகிறேன்.

அக்காலத்தில் மைசூரில் தர்க்கதீர்த்தர் கஸ்தூரிரங்காசார் ஸ்வாமி என்பவர் மிக ப்ரசித்த வித்வானாக எழுந்தருளி இருந்தார். இவர் தர்கம் மீமாம்ஸா முதலிய சாஸ்த்ரங்களில் கரைகண்டவர். இவர் காசிக்குச் சென்று அங்கிருந்த சிவகுமார சாஸ்த்ரி என்பவரிடம் தர்க்க சாஸ்த்ரத்தை க்ரோடபத்ரங்களுடன் வாசித்துத் திரும்பிவந்து அநேகம் பேருக்கு தர்க்கம் முதலிய சாஸ்த்ரங்களைச் சொல்லிக்கொடுத்தார்.

நாவல்பாக்கம் பெரியஸ்வாமி என்று ப்ரசித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ.உ.வே. நரஸிம்ம தாதாசார்யஸ்வாமியும் 13 வயதுக்குள் வேதாத்யயனத்தை முடித்துவிட்டு தர்க்கம் வாசிப்பதற்காக நடந்தே காசிக்குச் சென்று சிறிதுகாலம் சிவகுமார சாஸ்த்ரியிடம் தர்க்கம் வாசித்துவிட்டு அங்கு ஏற்பட்ட ப்ளேக் என்ற ரோகத்தால் பீடிக்கப்பட்டு இனி அங்கு இருக்கமுடியாது என்று தீர்மானம் செய்து அந்த சாஸ்த்ரியிடம் வாசித்த கஸ்தூரி ரங்காசார்யரிடமே வாசிக்கலாமே என்று நிச்சயித்து காசியிலிருந்து புறப்பட்டு மைசூருக்குத் திரும்பிவந்து அங்கு சில வருஷங்கள் தங்கியிருந்து தர்க்க சாஸ்த்ரத்தை ரங்காச்சாரியாரிடம் வாசித்துவிட்டுத் திரும்பி நாவல்பாக்கத்துக்கு வந்து பல வருஷங்கள் அங்குள்ளவர்களுக்குப் போதித்தார். மைசூரில் இருந்த போது தர்க்க சாஸ்த்ரத்தில் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி தங்க மெடல்கள் சால்வைகளைப் பரிசாகப் பெற்றர்.

ஸ்ரீநரஸிம்மதாதாசாரியரிடம் வாசித்தவர்கள் பலர். அவர்களுள் ஸ்ரீ.உ.வே. அய்யா தேவநாத தாதாசார்யர், ஸ்ரீ.உ.வே. சடகோப கிருஷ்ணஸ்வாமி தாதாசார்யர் முதலியவர்கள். இவர்களும் மைசூரில் பரீக்ஷை கொடுத்து முதலில் தேறி பரிசிகளைப் பெற்றவர்கள்.

நாவல்பாக்கம் நரஸிம்ஹதாதாசார்ய ஸ்வாமி ஸ்வாமிதேசிகனைப் போல் உஞ்சவ்ருத்தியிலேயே காலத்தைக் கழித்த உத்தமர். அவர், வலயப்பேட்டையில்

எழுந்தருளியிருந்த ஸ்ரீவேதாந்தராமானுஜ ஸம்யமிஸார்வபௌமர் பக்கலிலே வேதாந்தகாலக்ஷேபம் செய்தவர். திருவிசலூர் ராமதம்பி சாஸ்த்ரிகளிடம் மீமாம்ஸா சாஸ்த்ரத்தை அதிகரித்தவர். தாம் அதிகரித்த சாஸ்த்ரங்களையெல்லாம் நாவல்பாக்கத்திலுள்ளவர்களுக்கு ப்ரவசனம் பண்ணிவிட்டு பிறகு காஞ்சீபுரம் எழுந்தருளினார். அங்கு தேவப்பெருமாளை அனுதினமும் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டும் அண்டிய சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டும் எழுந்தருளியிருந்தார். காலக்ரமத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் எல்லா கோவில்களிலும் எல்லோரும் ப்ரவேசித்து எம்பெருமான்களை சேவிக்கலாம் என்று சட்டம் வந்துவிட்டபடியால் தம்முடைய திருமாளிகையில் வரதராஜ மூர்த்தியை ப்ரதிஷ்டைசெய்து திருவாராதனம் விடாமல் செய்துகொண்டு அண்டியவர்களுக்கு ஸமாச்ரயண பரன்யாஸங்களை அனுஷ்டித்து வந்தார்.

ஸ்வாமி பரமபதித்த பிறகு அவருடைய மாப்பிள்ளை வித்வான் கூத்தப்பாக்கம் க்ருஷ்ணமாசாரிஸ்வாமி ஆராதித்து வந்தார். அவரும் அசக்தராகப் போய்விடவே அந்த ஸ்வாமி ஆராதித்த திவ்யமங்களவிக்ரஹத்தை மைசூர் பரகாலமடத்துக்கு அப்போது எழுந்தருளியிருந்த அபிநவஸ்ரீநிவாஸ ப்ரம்ஹதந்த்ரஸ்வாமிகளிடம் ஸமர்ப்பித்துவிட்டார். பரகாலஸ்வாமிகள் தாங்கள் ஆராதிக்கும் ஹயக்ரீவனோடு கூட நாவல்பாக்கம் ஸ்வாமி ஆராதித்த வரதராஜப் பெருமாளையும் எழுந்தருளப்பண்ணி திருவாராதனம் பண்ணிவருகின்றனர்.

நாவல்பாக்கம் ஸ்வாமியின் நூற்று இருபதாவது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் காஞ்சீபுரத்திலும் நாவல்பாக்கத்திலும் விசேஷமாக நடைபெற்றது. அந்த சமயத்தில் ப்ரக்ருதம் பரகாலமடம் ஜீயர் அபிநவவாகீச ப்ரம்ஹதந்த்ரஸ்வாமிகள் ஹயக்ரீவனுடனும் வரதராஜனுடனும் காஞ்சிபுரத்துக்கு எழுந்தருளி அங்கு தென்னண்ட மாடவீதியிலுள்ள நாவல்பாக்கம் ஸ்வாமி திருமாளிகையில் திருமஞ்ஜனம், திருவாராதனம் முதலிவவைகளைச் செய்தார். அப்போது வித்வத்ஸபையும் நடைபெற்றது.

மேலும் அபிநவரங்கநாத ப்ரம்ஹதந்த்ரஸ்வாமிகள் பரகாலமடத்தில் அக்காலத்தில் ந்யாயஸித்தாஞ்ஜனம் தத்வமுக்தாகலாபம் முதலிய தேசிக க்ரந்தங்களில் பரீக்ஷை ப்ரதி வர்ஷமும் நடத்தி, அதில் தேர்ந்தவர்களுக்கு ஸம்பாவனையும் பரிசும் வழங்கிவந்தார். இப்பரீக்ஷையில் நாவல்பாக்கத்திலிருந்தே பலர் பரீக்ஷை கொடுத்து ஹயக்ரீவனுடையவும் பரகால ஸ்வாமிகளுடையவும் அநுக்ரஹத்தைப் பெற்றவர்கள்.

இப்படிப்பட்ட விசேஷங்களை தத்காலம் எழுந்தருளியுள்ள அபிநவவாகீச ப்ரம்ஹதந்த்ரபரகால ஸ்வாமியும் நடத்தி வருவது மிகவும் போற்றத்தகுந்தது.

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

# ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமதபினவ வாகீஶ ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ர பரகாலமஹாதேஶிகன்

ஸ்ரீமதுபயவே வித்வான் மஹாமஹோபாத்யாய சு.பையம்பாடி சேட்டலூர்
வா. ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி, நங்கைநல்லூர், சென்னை.

---

இந்த மஹான் மஹீசூரபுரி என்னப்பட்ட மைஸூர் பரகாலமடத்தில் 36வது பட்டத்தை அலங்கரித்துவரும் யதீஶ்வரர் ஆவார். இந்த ஸ்வாமி ஸந்நிதியில் அநந்த ப்ரமாணங்களைப் பண்ணிவிட்டு, இந்த ஸ்வாமிக்கு அடியேனிடம் உள்ள க்ருபையை இந்த சிறு வ்யாஸத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியே சில ஆப்தர்கள் கேட்டதின் பேரில் இந்த மஹானின் சரித்ரத்தையும், இவர் நம் ஸம்ப்ரதாயத்துக்குச் செய்த ஸித்தாந்தஸ்தாபனாதிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மஹானைப்பற்றி 1995வது ஆண்டுமுதல் பரிசயம் உண்டு. மைஸூர் சென்று பரகாலமடத்து ஸதஸ்ஸுக்களில் பலமுறை இவரை ஸேவித்துள்ளேன். திருநாராயணபுரத்தில் 1960வது வருஷம் அடியேன் பரீக்ஷை கொடுத்து விஶிஷ்டாத்வைத வித்வான் எனப்பட்டவன். அப்போதெல்லாம் அடியேனுக்கு இவரை அதிகம் தெரியாது.

இந்த ஸ்வாமியின் பூர்வாஶ்ரமத்திருநாமம் ஸ்வச்சந்தம் ஸ்ரீநிவாஸாசார்யர் என்பதாகும். மைஸூர் ப்ராந்த்யத்தில் ஸோம்நாத்பூருக்கு அருகிலுள்ள ஹிதஹல்லி என்ற அக்ரஹாரத்தில் - ஸ்ரீ.உ.வே ஸ்வச்சந்தம் வேங்கடநரஸிம்ஹாசார்யஸ்வாமி - ரங்கநாயகி அம்மங்கார் என்ற தம்பதிகளுக்கு ஆறாவது குமாரராய் பவ ஸ்ரீ சித்திரைமாதம் ரேவதிநக்ஷத்ரத்தில் (11-5-1934) அன்று அவதாரம். அது ஸ்ரீவராஹஜயந்தியாகவும், தூப்புல் தீபப்ரகாசன் எம்பெருமானின் அவதார தினமுமாகும்.

இந்த ஸ்வாமி கௌசிககோத்ரம். இதில் சேட்டலூர் - இளையவில்லி - விஞ்ஜிமூர் - என்பனபோன்று ஸ்வச்சந்தம் என்பதும் ஒரு உள்பிரிவு. இவர்களது முன்னோர்கள் - कर्तुम् अकर्तुम् अन्यथा कर्तुम् समर्थाः. ஆனது பற்றியே स्वच्छन्दम् என்று அவர்களது சாஸ்த்ர பாண்டித்யத்தால் வந்த

பிருதப் பெயர் இது. இதையே ஸ்வச்சந்தம் என்றும் கூறுவார்கள். அடியோங்களுடைய பையம்பாடி-சேட்டலூர் என்ற வம்ஶத்திலிருந்து பிரிந்தவர்களிலும் ஸ்வச்சந்தத்தார் பலர் உண்டு. ஸ்ரீமதுராந்தகம் திவ்ய தேசத்திலிருந்தும், பிறகு திருவையாறு கலாசாலையிலும் ந்யாய சாஸ்த்ரப்ரவசனம் செய்து வந்த ஸ்ரீ.உ.வே. ஸ்வச்சந்தம் ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமி சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜகத்ப்ரஸித்தர். அவரிடமே அடியேன் ஆசார்யன் ஸ்ரீமதபிநவதேசிக ஸ்ரீ உத்தமூர் தி.வீரராகவாசார்ய ஸ்வாமி தர்க்கம் பயின்றது.

நம்ஸ்வாமி தமது பாட்டனார் கிட்டிவில்லி ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியிடம் 5 வயதுக்குள்ளேயே எல்லா ஸ்தோத்ரபாடங்களையும் அதிகரித்தவர். கர்ப்பாஷ்டமத்தில் தன் திருத்தகப்பனாரால் உபநயனம் செய்விக்கப்பட்டவர். தமது பிதாமஹரிடம் வேதாத்யயனம் செய்யத்தொடங்கி பிறகு கனபாடி ஸ்ரீ.உ.வே. ஸ்வச்சந்தம் அநந்தாசார்ய ஸ்வாமியிடம் பூர்ணவேதாத்யயனம் செய்தருளினார்.

நமதுஸ்வாமிக்கு தமது பத்தாவது வயதிலேயே ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீஆக்கூர் ஆண்டவன் திருவடிகளில் (ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்) பஞ்சஸமஸ்காரம், ஹயக்ரீவ மந்த் ரோபதேசம் முதலானவைகள் ஆயின. அதேபோல் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீதென்பிறை ஆண்டவன் ஸ்வாமியிடம் திருவாய்மொழி, பாதுகாஸஹஸ்ர காலக்ஷேபம், வ்யாகரண சாஸ்த்ராப்யாஸம் முதலியன நடைபெற்றன.

அந்நாளில் ப்ரஸித்தரான ஸ்ரீதில்லைஸ்தானம் ஸ்வாமி ஸ்ரீசடகோப ராமாநுஜமஹாதேசிகனிடம் பகவத்விஷயம், யாதவாப்யுதயம், மந்த்ரோபதேசங்கள் முதலானவை நடைபெற்றன. ஸ்ரீதில்லைஸ்தானம் ஸ்வாமி "இவருக்கு மந்த்ரஸித்தி ஏற்படும்" என அநுக்ரஹித்தார்.

பிறகு பரகாலமடத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் அபினவ ரங்கநாத ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ரபரகால ஸ்வாமிகளை (33ம் பட்டம் யதீஸ்வரர்) ஆஶ்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகளையும், ரஹஸ்யக்ரந்தங்களையும் காலக்ஷேபம் செய்தருளினார். அந்த மஹானிடத்திலேயே சரணாகதியும் இவருக்கு. அவரே இவரை ஸ்ரீபரகாலமடத்தில் ஸ்ரீஹயக்ரீவாராதன கைங்கர்யத்தில் ஈடுபடுத்தியருளினார்.

பிறகு ஸ்ரீ.உ.வே. அண்ணயார்யமஹாதேசிகன் ப்ரசிஷ்யரான வேளூர் ஸ்ரீ.உ.வே க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம் அநேக அபூர்வ மந்த்ரோபதேசம் பெற்று ஸித்தி பெற்றார். பல ஆகம நூல்களையும் அவரிடமே கற்றுத்தெளிந்தார்.

மைஸூர் பாடசாலையில் ஆகம வகுப்புக்கான பாடதிட்டங்களை இவரே ஏற்படுத்தினார். அதை மைஸூர் யூநிவர்ஸிடி ஏற்றது.

ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி திருக்குடந்தை ஆண்டவன் ஸ்வாமி ப்ரீதிக்கும் பாத்ரமாகி அவர் காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்தார். கன்னட தேசத்தில் பல ஸதஸ்ஸுக்களில் ஆகம-வேதாந்த பரீக்ஷாதிகாரியாக இருந்து புகழ்பெற்றார். ஒரு ஸமயம் - ஸ்ரீஉத்தராதிமடத்து ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி மத்வஸ்வாமி கேட்ட மிகவும் கஷ்டமான ஆகமப்ரஶ்னங்களுக்கு அநாயாஸேன ஆஶ்சர்யமான வகையில் பதில் அருளி விஶேஷ பஹுமானத்தைப் பெற்றார்.

தமது பூர்வாஶ்ரமத்திலேயே பல மஹனீயர்களுக்கு ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், திருப்பாவை, ஸ்ரீமத்ராமாயணம் முதலானவைகளை காலக்ஷேபமாக ஸாதித்துவந்தார்.

பிறகு 3.3.1992ல் நம்ஸ்வாமிக்கு பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் அபினவ ராமாநுஜ ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ர பரகால மஹாதேசிகன் ஸந்ந்யாஸாச்ரமம் அருளினார். "நம் மடத்துக்கு நீரே இனி ஆசார்யன்" என அருளி பட்டாபிஷேகம் செய்து வைத்தருளினார். ஸ்ரீபரமபரி - ஸ்ரீரங்கப்ரியா ஸ்வாமிகளும் அப்போது உடன் எழுந்தருளியிருந்தார்.

நம்ஸ்வாமி பட்டத்துக்கு வந்ததும் பலவிடங்களில் புதியதாக மடங்களை நிர்ணயித்தும், முக்கியமாக ப்ராசீநமாக இருந்த பல மடங்களை பழுதுபார்த்து ஜீர்ணோத்தாரணமும் செய்தருளினார். சென்னை, ஹைதராபாத், தூப்புல் (காஞ்சீபுரம்), ஸத்யகாலம், திருமலை, ஸ்ரீரங்கப்பட்டணா, கர்ணாடகத்திலும், ஆந்திராவிலுமுள்ள பல சிறு ப்ராசீந மடங்களும் இவர் பெருமைக்கு எடுத்துக்காட்டு.

ஒவ்வொரு வருஷமும் விஶிஷ்டாத்வைத வித்வத் ஸதஸ்ஸுகளை தனது ஆசார்யன் ஸ்ரீமதபினவ ரங்கநாத ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ர பரகால ஸ்வாமியின் நியமனப்படி குறைவின்றி நடத்திவருவது யாவரும் அறிந்ததே. பூர்வாசார்ய ப்ருந்தாவனங்களைப் பராமரித்து நித்யாராதனாதிகள் தடையின்று நடைபெற அருளிவருகிறார்.

ஸ்ரீபரகாலமடத்தின் முன் எழுந்தருளியிருந்த பல மஹனீயர்களான வித்வான்கள் அருளிய உயர்ந்த க்ரந்தங்களை அச்சிட்டு வெளியிட்டுவருவது யாவரும் அறிந்ததே. குறிப்பாக ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீகிருஷ்ணப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரபரகால ஸ்வாமிகள் அருளிய க்ரந்தங்களை ஐந்து மலர்களாக வெளியிட்டதைக் காணலாம். மேலும் பல வரவிருக்கின்றன.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தை வ்யாக்யானத்துடன் கன்னட எழுத்தில் அச்சிட்டு வெளியிட்டதைக் காண்க. அதேபோல் ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரபரகால ஸ்வாமிகள் (22ம் பட்டம் யதீஸ்வரர்) அருளிய லக்ஷ்ம்யுபாயத்வதீபம் இவ்வாண்டு தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளிவருகிறது. இதுவரை ஓலைச்சுவடியாகவே இருந்த ஸ்ரீமஹாபரகால ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிய ஸ்ரீபாஷ்ய வ்யாக்யார்த்தம் "மிதப்ரகாசிகா" என்ற க்ரந்தம் அச்சிட்டு வெளிவர இருக்கிறது. அதேபோல் ஸ்ரீமஹாபரகால ஸ்வாமியின் பதினெண்ணாயிரப்படி (18000) திருவாய்மொழி

வ்யாக்யானமாக தத்வார்த்தப்பிரகாசிகை தமிழ்-நாகர அக்ஷரங்களில் வெளிவர இருக்கிறது. இப்படி இன்னும் பல.

இப்படி अध्यात्मग्रन्थनिर्माणं अन्येषां चावबोधनम्। अर्चावतारसेवेति என்றபடி எல்லா ஸம்ப்ரதாயத் திருப்பணிகளையும், தக்க அதிகாரிகளைக் கொண்டு இந்த திருநக்ஷத்ரத்திலும் செய்து கொண்டுவரும் இந்த மஹான் இன்னம் பல்லாண்டுகள் திருமேனிபாங்காய் எழுந்தருளிக்கொண்டு இருக்க அந்த லக்ஷ்மீஹயக்ரீவனையே ப்ரார்த்திக்கிறேன். எல்லோரிடமும் எப்போதும் சிறிதும் கோபப்படாமல் சிரித்த திருமுகமண்டலத்துடன் பரிவுடன் அருள்வதை - அதிலும் அடியேனிடம் விசேஷக்ருபை கொண்டு எழுந்தருளியிருப்பதையும் எப்போதும் மனக்கண்ணால் ஸேவித்து வருகிறேன்.

बहुभ्य: श्रोतव्यम्, बहुधाश्रोतव्यम् என்ற வசனத்திற்கு இணங்க இந்த ஸ்வாமிக்கு அனேகம் மஹனீயர்கள் அவ்வப்போது ஆசார்யராய் எழுந்தருளியிருந்து கிடைக்கத்தகாததொரு பகவதாநுகூல்யமே. ஸ்ரீபீஷ்மர் தன்னைப்பற்றி கூறிக்கொள்ளும் போது - ज्ञानवृद्धा: मया राजन् बहव: पर्युपासिता: என்றருளியதையும் கவனித்தால் பெரியோர்களின் பெருமை தெரியவரும்.

இப்பவும் நாளது ஜய வருஷம் சித்திரை மாதம் ரேவதி திருநக்ஷத்ரத்தன்று ஞாயிற்றுக்கிழமை (27-4-2014) இம்மஹானுக்கு சதாபிஷேக மஹோத்ஸவம் இவரது சிஷ்ய-ப்ரசிஷ்யர்களால் மைஸூர் பரகாலமடத்தில் நடைபெற உள்ளது. அதற்கு அங்கமாக வெளியிடப்படும் மலரில் இந்த மஹானைப்பற்றி எல்லோரும் அறிந்து க்ருதார்த்தராக வேண்டும் என்ற எண்ணத்தில் யதாமதி இப்படி அடியேன் எழுதினேன். இதில் குற்றம் குறைகள் இருந்தால் மஹான்கள் க்ஷமிப்பார்களாக.

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

# வாகீஶனும் வாகீஶரும்

ஸ்ரீமதுபயவே. வித்வான் வடுவூர் வீரராகவாசார்யஸ்வாமி, சென்னை.

---

हयग्रीवः परं तत्त्वं हयग्रीवपदं हितम्।
हयग्रीवः परं प्राप्यं घोषत्यश्वतरा श्रुतिः॥
अवतीर्य स्वयं लोके श्रुतीरितमुदीरितुम्।
वागीशोऽभून्मठाधीशः वागीशमुनिरूपधृक्॥
वागीशमुनिरूपेण धृत्वा जन्म स्वयं प्रभुः।
वागीशो नन्दते लोके ननुयन् लोकं अद्भुतम्॥

ஆசார்யனுக்கு வேண்டிய குணங்களில், 'सिद्धं सत्सम्प्रदाये' என்பது முதலாகக் கூறப்பட்டது. "माता पिता युवतयः तनया विभूतिः सर्वं यदेव नियमेन मदन्वयानाम्" - நாதமுனிகள் முதலான எம் குலத்தோர் பூ மன்னு மாது பொருந்திய மார்பனால் மயர்வறமதிநலம் பெற்ற ஆழ்வார் திருவடிகளையே அனைத்துமாய்ப் பற்றியவர் என்றார் ஆளவந்தார். திருவரங்கத்தமுதனாரோ, இராமானுசனை அந்தாதியால் போற்றத் துவங்கி "பூ மன்னு மாது பொருந்திய மார்பன் – புகழ்மலிந்த பாமன்னுமாறன் அடி பணிந்துய்ந்தவன் – பல்கலையோர் தாம் மன்ன வந்தவிராமானுசன் சரணாரவிந்தம் – நாம் மன்னிவாழ – நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே" என்று பெருமாள், பிராட்டி, ஆழ்வார் ஸம்பந்தத்தால் "ஸத்ஸம்ப்ரதாய ஸித்தியுள்ள இராமானுசன்" என முதலுரைத்தார்.

அப்படிப்பட்ட सत्सम्प्रदायसिद्धियும், பெருமையுமுள்ள परकालमठास्थान-आधिपत्यமும், महाचार्यர்கள் – आराधித்த श्रीहयग्रीवाराधनभाग्यமும், பலவிதமான महनीयगुणங்களால் पूर्णतैயும் கொண்டவர் श्रीमदभिनव वागीश ब्रह्मतन्त्रस्वतन्त्र परकाल महादेशिकன். இந்த ஸ்வாமியின் ஶதாபிஷேக ஸமயம் அவர்தம் குணாநுபவம் ஸ்ரீவைஷ்ணவர்கட்கெல்லாம் உத்தேச்யம், அடியேனுக்கும் உத்தேச்யம். அதை இரு பாகங்களாகப் பார்ப்போம்.

## பாக்யம் – 1

सत्सम्प्रदायसिद्धोऽयं मन्त्रसिद्धो महामुनिः।

मृदुः मधुरवागार्यो जेजीयाच्छरदां शतम्॥

**ஸ்ரீபரகால மடம்-ஆஸ்தான பெருமை:**

ஸ்வாமி தேசிகன் ஆசார்யபரம்பரையை மங்களாசாஸனம் செய்யும் போது உரைப்பது கீழ்கண்டவாறு.

நம் ஆசார்யபரம்பரை

1. ஆனந்தமாயிருப்பது – சொல்லில் இன்பம் பயப்பது.
2. தம் ஹ்ருதயகமலமாம் ஸிம்ஹாஸனத்தில் இனிதமர்ந்த பரிமுகப்பெருமானின் அலைகளாய் எதிரொலிக்கும் கனைப்புகளாலே அழிக்கப்பட்ட எதிர்வாதம் புரிபவரின் கர்வத்தையுடையது – ஒவ்வோர் ஆசார்யரும் ஹயக்ரீவானுக்ரஹத்தால் ப்ரதிமதங்களை ஜெயிக்கும் ஸாமர்த்யமுள்ளவர்.
3. பலநற்குணங்களையுடையது
4. திக்குகளாம் மாடிகளில் கட்டப்பட்ட जयध्वजपटங்கள் காற்றில் அசையும்போது ஏற்பட்ட சுழற்சியால் விலக்கப்பட்ட பிற ஸித்தாந்தங்கள் புறம் தள்ளப்பட்டு, அதனால் நன்கு प्रकाशिக்கும் वेदान्तसन्मार्गத்தை உடையது – தம் இன்னமுதமொழிகளால் புறமதங்களால் ஏற்படும் கலக்கத்தைப் போக்கி தெளிவான ஸத்ஸம்ப்ரதாயத்தில் சிஷ்யரை நடத்துபவர்.

ஆக ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் ஹ்ருதயத்தில் இனிதமர்ந்தருளுகை பரிமுகனுக்கும் பெருமையாயிற்று. அப்பரிமுகப்பெருமானையே தம் திருவாராதனமாக , குலதனமாகக் கொண்டமை ஸ்ரீமத் பரகால மடத்திற்குப் பெருமை. இந்த यतिकुलத்திற்குக் கூடஸ்தர், தேசிகஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவருக்கும், காலக்ஷேப ஆசார்யபரம்பரையில் நித்யானுஸந்தேயரான ब्रह्मतन्त्रस्वतन्त्रजीयர் என்பது இவ்வாஸ்தானத்தின் தனிச்சிறப்பு.

**பரிமுகன் பெருமை:**

ப்ரளய காலத்தில் ஜீவாத்மாக்களின் க்ஷேமத்தை எண்ணி நினைத்து, அநிருத்தன் என்ற திருமேனியுடன் எம்பெருமான் பள்ளி கொண்டிருந்தான். தனது நாபிக்கமலத்தில் நான்முகனைப் படைத்தான். உலகைப்படைக்கும் வழியறிய நான்கு வேதங்களையும் உபதேசித்தான். நாபிக்கமலத்தில் இருந்த இரண்டு நீர்த்துளிகள் மது கைடபர் எனும் இரண்டு அரக்கர்களாக மாறின. அம்மதுகைடபர்கள் பிரமன் பக்கல் குழந்தையுருவுடன் இருந்த நான்கு வேதங்களையும் பறித்துக்கொண்டு பாதாள உலகிற்குச் சென்றனர். ப்ரஹ்மாவோ

அநிருத்தரூபியான பெருமானிடம் முறையிட்டான் – “பரமனே! வேதங்களை மதுகைடபர்கள் அபஹரித்துக் கொண்டு ஓடிவிட்டனர். அவையே என் வாழ்வாதாரம். உலகே எனக்கு இருண்டுள்ளது. எவ்வாறு உலகைப் படைப்பேன்? யோகநித்திரையை விட்டு எனக்கு அருள வேண்டும்” எனக் கைகளைக் கூப்பித் துதிக்கலானார். அநிருத்தனும் வெள்ளைப் பரிமுகனாய் உருவமெடுத்து பாதாளத்திற்குச் சென்று அங்கு உத்கீதம் எனும் ஸ்வரத்தை எழுப்பினார். இதைக் கேட்டதும் மதுகைடபர் வேதங்களை ஓரிடத்தில் வைத்து, ஓசை வந்த திக்கை நோக்கிச் சென்றனர். ஹயக்ரீவப்பெருமான் வேதங்களை எடுத்துக் கொண்டு வந்து நான்முகனிடம் ஒப்படைத்தார். மீண்டும் யோகநித்ரையில் ஆழ்ந்தார். வேதங்களைக் காணாத மது-கைடபர் ஓடி வந்து அநிருத்த ரூபத்தில் பரிமுகனின் உருவத்தைக் கண்டனர். நம்மிடம் பயந்து மாற்றுருவில் தூங்குவதாக பாவனை செய்கிறான் – என நினைத்தனர். அட்டகாசம் செய்து ஹரியை எழுப்பினர். எம்பெருமான் ஹயக்ரீவனாக எழுந்தான். போர் புரிந்தான். மதுகைடபரை மாய்த்தான். மதுஸூதனன் ஆனான். உலகைப் படைக்கும் ஞானத்தை நான்முகனுக்கு அளித்தான். அவரை அநுக்ரஹித்து மறைந்தான். மஹாபாரதத்தில் விஸ்தாரமாய்ப் பேசப்பட்ட இவ்வைபவம், ஸ்வாமி தேசிகனால் ஸ்ரீகுருபரம்பராஸாரத்தில் ” हंस-मत्स्य-हयग्रीव-नरनारायण-गीताचार्याद्यवतारங்களாலே, தானே வெளிநின்று तत्त्वहितங்களை प्रकाशिப்பித்தும்” எனக் காட்டப்பட்டுள்ளது.

**<u>கோயிலாழ்வாரின் (இவ்வர்ச்சை) பெருமை:</u>**

ஸ்ரீபரகால மடத்தின் திருவாராதனப்பெருமாள் – கோயிலாழ்வார்-அர்ச்சாமூர்த்தி மிக்க பெருமை வாய்ந்தவர்.

**<u>வாக்தேவதையாம் ஸரஸ்வதியின் அநுக்ரஹம்:</u>**

ஸ்வாமி எம்பெருமானார் ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு பாஷ்யம் இயற்றி அப்பாஷ்யத்தை காஶ்மீரத்திலுள்ள ஸரஸ்வதீபீடத்தில் ஸமர்ப்பித்தருளினார். உடையவர் ஸாதித்த பாஷ்யத்தின் சீர்மையைக்கண்டு வியந்த வாக்தேவதையாம் ஸரஸ்வதீதேவி “மிகவுயர்ந்த பாஷ்யம். உபநிஷத்துக்களின் உள் மனம் நன்கு ப்ரகாசமாயிற்று. இதனை ஸ்ரீபாஷ்யம் என்றே இனி அமைப்பர்” எனக் கொண்டாடினாள். ஆதலின் ஸ்வாமி உடையவரும் ஸ்ரீபாஷ்யகாரர் ஆனர். அச்சமயம் ஸரஸ்வதீ தேவி , “எம் அநுக்ரஹமாக உமக்கு (ஸ்ரீபாஷ்யகாரருக்கு) நான் ஆராதிக்கும் ஹயக்ரீவமூர்த்தியை அநுக்ரஹிக்கிறேன்” என்று ஹயக்ரீவமூர்த்தியை ப்ரஸாதித்தாள். ஸ்வாமி எம்பெருமானாரும் ஸ்ரீஹயக்ரீவனை திருவாராதனத்தில் சேர்த்து ஜீவித தசை முழுதும் ஆராதித்து, தம் அந்திம தசையில் தம் ஞானபுத்ரரான ஸ்ரீதிருக்குருகைப்பிரான் பிள்ளானுக்கு எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தார். பிறகு க்ரமமாக ஸ்வாமி பிள்ளானின் வம்சத்தில் வந்த ஆசார்யபுருஷர்கள் இந்த மூர்த்தியை குலதனமாகபற்றி ஆராதித்து வந்தார்கள். அவ்வரிசையில் வந்த ஸ்ரீபுண்டரீகாக்ஷர் என்பவர் ஹயக்ரீவ ஆராதனம் செய்தருளினார். இவர் ஸ்வாமி தேசிகனின் மாதுலரான கிடாம்பி அப்புள்ளாரின் ஜாமாதாவுமாவர். ஸ்ரீபுண்டரீகாக்ஷருக்கு ஸ்ரீஹயக்ரீவன் ஸ்வப்னத்தில் நியமிக்க அவரும்

ஸ்ரீஹயக்ரீவ நியமனப்படி இவ்வர்ச்சையை ஸ்வாமி தேசிகனுக்கு எழுந்தருளப் பண்ணிக் கொடுத்தார்.

**ஸ்வாமியால் ஆராதிக்கப்பட்டவர்:**

நம் தூப்புல் பிள்ளையும் ஸ்ரீலக்ஷ்மீஷயக்ரீவனை ப்ரதிதினமும் ஆராதித்து மகிழ்ந்தார். தம் அந்திமதசையில் ஸ்ரீஹயக்ரீவப்பெருமாளை தம் சிஷ்யரான ப்ரஹ்மதந்த்ர ஜீயரிடம் எழுந்தருளப் பண்ணினார். அதன் பிறகு ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளாக ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் முதலான ஸ்ரீமத் பரகாலமட ஆஸ்தானத்தை அலங்கரிக்கும் யதிவரர்களால் ஆராதிக்கப்படுபவர். ஆக, ஸ்ரீபாஷ்யகாரார், அப்புள்ளார், ஸ்வாமி தேசிகன் போன்ற மஹாசார்யர்களால், "நினைந்துநைந்து உள்கரைந்து உருகி, இமையோர் பலரும் முனிவரும் புணைந்த கண்ணநீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கி" என்னும்படி ஆராதிக்கப்பட்ட பெருமையையுடைய பரதேவதை.

**அரங்கனும் ஹயக்ரீவனும்:**

ஸத்யலோகத்திலிருந்து திருவயோத்தி எழுந்தருளி, சக்ரவர்த்தித் திருமகனால் ஆராதிக்கப்பட்டு, அவரால் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு அனுக்ரஹிக்கப்பட்டு, இலங்கையேற எழுந்தருளுங்கால் வழியில் கோயில் கொண்ட இக்ஷ்வாகுகுலதனம் பெரியபெருமாள் திருவரங்கன்.

இப்பெருமானோ காஸ்மீரத்திலிருந்து ஸ்ரீபாஷ்யகாரரது திருக்கோயிலாழ்வாரில் எழுந்தருளி, பல திவ்யதேசங்கள் மஹாசார்யர்களுடன் எழுந்தருளி ஸ்ரீபரகாலமடத்துத் திருவாராதன மூர்த்தியாக ஸ்ரீவைஷ்ணவதனமாகத் திகழ்கிறார்.

**கர்ணாட தேச பாக்யம்:**

இவ்வர்ச்சையில் ஈடுபட்ட ஸ்ரீமதபினவ ரங்கநாதபரகால ஸ்வாமி தாம் गूढार्थसङ्ग्रहம் எனும் व्याख्यानग्रन्थம் பண்ணியருளுங்கால் மங்களம் செய்து ஹயக்ரீவஸாந்நித்யத்தை ப்ரார்த்திக்கிறார்.

"ईशाना सर्वस्या वाचो देवी यदङ्कमध्यास्ते।

कर्णाटदेशभाग्यं वागीश्वर एष मम मनोविशतात्॥"

எல்லா வாக்கிற்கும் அதிஷ்டான தேவதையாம் ஸரஸ்வதி தேவீ எவனது இடையிலமர்ந்துள்ளாளோ, கர்ணாடக தேஶபாக்யத்தில் வடிவாம் அந்த ஹயக்ரீவன் என் மனதில் அமர வேண்டும். இங்கு ஹயக்ரீவனை கர்ணாடக தேஶத்தின் பாக்யம் என்று கொண்டாடுகிறார்.

**ஶதாபிஷேகநாயகராம் அபிநவ வாகீஶர்:**

இந்த ஹயக்ரீவன் தம் திருவாராதனத்திற்காகவும், தம் ஆஸ்தானமாம் ஸ்ரீபரகாலமடத்திற்கு அதிபதியாகவும் "ज्ञानी त्वात्मैव" எனத் திருவுள்ளம் பற்றிய தவஶீலர் நம் அபிநவ வாகீஶர், வாகீஶனாம் ஹயக்ரீவனது கருணையே வடிவு கொண்டதோ? என்னும்படி கருணாமூர்த்தியாய்த் திகழ்பவர் நம் அபிநவ வாகீஶ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால மஹாதேசிகன். அவர்தம் பிற மஹனீயகுணங்களை சிறிது சிந்திப்போம்.

## பாக்யம் - 2

**मन्त्रसिद्धः - மந்த்ரஸித்தர்.**

நம் ஆசார்யர்கள் அனைவரும் (திருவஷ்டாக்ஷர) மந்த்ரஸித்தி பெற்றவர்கள் என்பது ஸம்ப்ரதாயம். மேலும், ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் பெங்களூர்-ஜயநகர் ஆஶ்ரம நிர்மாணம் செய்த ஸமயம், ஓர் திருவஷ்டாக்ஷர யாகம் நடத்தியபடி. அச்சமயம் நம் ஸ்வாமியும் தம் பூர்வாஶ்ரமத்தில் விஶேஷமான அந்வயமும், பஹுமானமும் பெற்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். தற்போதும் ஸ்வாமியின் அந்தேவாஸிகளும், பக்தர்களும் ஸ்வாமியிடம் ஹயக்ரீவ மந்த்ராதி உபதேஶம் பெற்றுப் பயன்பெறுவதும் கண்கூடு.

**महामुनिः – மஹாமுனி:**

"मुनिः मननशीलः" மனனம் என்றால் கேட்டு அறிந்ததை மீண்டும் மீண்டும் நினைத்திருப்பது – ஆராய்வது. அவ்வாறு வேதாந்தார்த்தங்களை அடிக்கடி சிந்தித்து இருப்பவருள் சிறந்தவர். மேலும், கிடைக்கும் அவகாஶங்களிலெல்லாம் மந்த்ரஜபாதிகளில் ஈடுபடுவதாலும், யதீஶ்வரராதலாலும் நம் வாகீஶர் மஹாமுனியாகிறார்.

**ம்ருது: - எளிமையாம் தன்மை:**

தம்மை தெண்டனிட வருபவர் எவரானாலும் அவர்தம் வசதிக்கேற்ப அநுக்ரஹித்தாகும். அடியேனைக் கடாக்ஷிக்கும் போதெல்லாம் அடியேனது ஆசார்ய ஸம்பந்தத்தைக் கொண்டாடி "ஆச்ரமம் சென்றிருந்தாயா? அடிக்கடி சென்று வரவும்" என அருளிச்செய்தாகும்.

ஓர் திருவோண உத்ஸவத்தன்று சென்னை பலாத்தோப்பில் எழுந்தருளியிருந்தபடி. அபிகமன கோஷ்டியில் அன்வயிக்க ஆசையுடன் சென்றேன். தூரத்தே நின்று ஸேவித்தவனை, அருகே அழைத்து பகவத்ஸேவையில் நிறுத்தி, திருமஞ்ஜனம் ஸேவித்து, ப்ரஸாத ஸ்வீகாரம் செய்தபின்னரே செல்லும்படி வாஞ்சையுடன் நியமித்தபடி.

**स्वाभाविकமான मार्दवम्:**

"शैत्यं हि यत्सा प्रकृतिः जलस्य।" - குளிர்ச்சியான தன்மை ஜலத்திற்கு ஸ்வபாவம் என்றான் மஹாகவி. அவ்வாறு மிகவும் मृदुप्रकृतिயாய் எழுந்தருளி இருப்பவர் நம் ஸ்வாமி. அடியேன் ஸ்ரீமத் திருகுடந்தை ஆண்டவனிடம் க்ரந்த காலக்ஷேபம் செய்து கொண்டிருந்த ஸமயத்தில் ஸ்வாமி அவ்வப்போது ஆஶ்ரமத்திற்கு எழுந்தருள்வது வழக்கம். ஸ்வாமியை "பரமஸாத்விகர்" என்று

ஸ்ரீமதாண்டவன் கொண்டாடுவது வழக்கம். இந்த மிருதுவான தன்மை सात्त्विकप्रकृतिகளின் குணங்களில் ஸ்ரீபகவத்கீதையின் உதாஹரிக்கப்பட்டுள்ளது-

"अभयं सत्त्वसंशुद्धिः ज्ञानयोग्यव्यवस्थितिः।
दानं दमश्च यज्ञः च स्वाध्यायः तप आर्जवम्॥
अहिंसा सत्यं अक्रोधः त्यागः शान्ति अपैशुनम्।
दया भूतेष्वलोलुस्वं मार्दवं ह्रीः अचापलम्॥
तेजः क्षमा धृतिः शौचं अद्रोहो नातिमानिता।
भवन्ति संपदं दैवीं अभिजातस्य भारत॥ "

"मार्दवं अकाठिन्यम् साधुजनसंश्लेषार्हतेत्यर्थः" – என்று श्रीगीताभाष्यम् . साधुजनसंश्लेषार्हता – நல்லோர்களுடன் சேர்ந்து பழகுவதற்கான யோக்யதை எனப்படுவது. நல்லோர்களிடம் असूयै இருக்காது. மற்றவர்களிடம் உள்ள குணங்களையே புகழுவார்கள். தோஷங்கள் என்ன? என்று துருவிப் பார்க்கமாட்டார்கள். அப்படிப்பட்ட साधुக்கள் – ஸாத்விகர்கள் – நம் யதிவரரைப் போன்ற मार्दवम् உள்ள மஹான்களிடமே பழகுவார்கள்.

**<u>बदरिकाश्रम यात्रैயில் उत्साहम् & அடியேன் கண்ட மார்தவம்:</u>**

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் 1976-செப்டம்பர் மாதம் மத்தியில் ரிஷீகேஸத்திலிருந்து பதரிகாஸ்ரமம் யாத்ரை மேற்கொண்டபடி. ஸ்ரீமதாண்டவனுடன் பாதயாத்ரையில் உடன் வந்து பதரீநாதனை மங்களாஸாஸனம் செய்ய நம் ஸ்வாமியும் திருவுள்ளப்பட்டு ரிஷீகேசத்திற்கு எழுந்தருளினார். செப்டம்பர் 11ம் தேதி புறப்பட்டு 22ம் தேதி இரவு பத்ரீநாத் எழுந்தருளியதாக அடியேனுக்கு ஓரளவு ஞாபகம். (தேதிகளில் தவறிருந்தால் பாகவதர்கள் க்ஷமிக்கவும்). அப்போது ஸ்வாமியுடன் அணுகி வர்த்தித்த ஓரிரு அநுபவங்கள்.

**<u>அநுபவம் 1:</u>**

ரிஷீகேஸத்திலிருந்து கிளம்பிய மறுநாள் காலை திருவாராதனத்திற்காக ஏற்பட்ட இடத்திற்குச் சிறிது தூரம் முன்பிருந்த அருவியில் தம் நீராட்டத்தையும் முடித்துக் கொண்டு, ஸ்ரீமதாண்டவன் ஆராதன ஜாகைக்கு எழுந்தருளியாயிற்று. நம் ஸ்வாமி பலமுகமாய்ப் பெருகிற அருவியில் ஸ்ரீமதாண்டவன் நீராடிய (காலில்) பெருக்கில் நீராடத் துவங்கினார். அடியேன் மற்றோர் இடம் சௌகர்யமாக கருதி அங்கே செல்ல யத்தனித்தேன். ஸ்வாமியையும் அழைத்தேன். அப்போது ஸ்வாமி அடியேனிடம் "பக்கத்திலிருக்குமிடம் இன்னமும் சௌகர்யப்படலாம். நீர் ஸ்வாமிக்கு அந்தேவாசியாயிற்றே. மஹான்கள் நீராட்டம் கண்டருளிய இடமே पुण्यतीर्थம் இல்லையா? இந்த அருவியை விட்டுச்செல்வானேன்?" என்று சிக்ஷித்து ஸ்ரீமதாண்டவன் நீராட்டம் கண்டருளிய இடத்திலேயே தீர்த்தமாடும்படி செய்தாயிற்று.

**அநுபவம் 2:**

ஸ்ரீமதாண்டவனது யாத்ரை தேவ்ப்ரயாகை, ருத்ரப்ரயாகை, கர்ணப்ரயாகை, நந்தப்ரயாகை என்ற நான்கு ப்ரயாகைகளைக் கடந்தபின் ஓர் ஏகாதசி, காலை "ஹெலங்" என்ற சிறு க்ராமத்தில் எழுந்தருளியபடி. அன்று மாலையும், மறுநாள் பாரணைக்கும் அங்கேயே ஏள்ளியிருந்தபடி. இரண்டு கிராம வீடுகள். ஒன்றில் ஸ்ரீமதாண்டவன் தம் திருவாராதனத்துடன் எழுந்தருளியாயிற்று. மற்றொன்றில் கைங்கர்யபரர்கள் எல்லோரும் இருந்தோம். மத்தியானம் பலரும் விஶ்ராந்தியாய் இருந்தபோது நம் ஸ்வாமி ஓரிருவருடன் அடிக்கடி வெளியே சென்றார். அடியேன் ஸ்வாமியிடம் "என்ன விஷயம்" என்று கேட்டேன். "பக்கத்திலுள்ள அருவியில் வெள்ளப்பெருக்கு. பாலத்தில் ஓர் பகுதி போய்விட்டது. எல்லைப்படை வீரர்கள் செப்பனிட்டு வருகின்றனர். மீண்டும் மீண்டும் உடைப்பு ஏற்படுகிறது. ஸ்ரீமதாண்டவனுடைய யாத்ராக்ரமத்தில் சிரமம் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்ற அபிப்ராயம். சயனிக்க விருப்பமில்லை. தம்பி மாமாவுடன் அடிக்கடி சென்று பார்த்து வருகிறேன்" என்றார். ஸ்ரீமதாண்டவனிடம் ஸ்வாமி மிகுந்த கவலையுடன் பாலத்தைச் சென்று பார்த்ததை விக்ஞாபித்தேன். ஸ்ரீமதாண்டவன் "அவருக்கு பாகவதபக்தி அதிகம். உனக்கு என்னிடம் அவ்வளவு பக்தி இல்லை. அது ஏற்பட்டால் உனக்கு நல்லது" என ஹாஸ்யமாய்ச் சொல்லி அடியேனை சிக்ஷித்தபடி. ஸ்வாமியைக் கொண்டாடியபடி.

பிறகு வெள்ளப்பெருக்கு வடிந்து பாலம் சீர்பட்டது. மறுநாள் பாரணை முடிந்தவுடன் ஸ்ரீமதாண்டவன் 8 மணிக்குக் கிளம்பி ஜோஷிமட்டில் ஓரிடத்தில் தங்கியாயிற்று. மறுநாள் காலை பாண்டுகேஷ்வர் எழுந்தருளி, திருவாராதனம் செய்து, அன்று மாலை கிளம்பி பதரீநாத் எழுந்தருளியாயிற்று.

**ஸ்வாமியின் ஹாஸ்ய உணர்வு:**

பாண்டுகேஷ்வரிலிருந்து "ஹநுமான் சட்டி" வழியாக பத்ரிநாத் மார்க்கம் செல்கிறது. நம் ஸ்வாமி தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு, கையில் ஓர் கம்புடன் எழுந்தருள்வது வழக்கம். ஸ்ரீமதாண்டவன் எழுந்தருள்வதற்கு சிறிதுமுன்னே நம் ஸ்வாமி செல்வார். அடியேனும் பலசமயங்களில் உடன் செல்வது வழக்கம். ஒரு நாள் அடியேன் "முன்னே செல்லலாமா?" எனக் கேட்டேன். ஸ்வாமி அதற்கு –

"अग्रतस्ते गमिष्यामि मृद्नन्ती कुशकण्टकान्।

इति सीताऽपि यद्वृत्तिमियेष प्रणमामि ताम्॥"

என்று श्रीपादुकैகள் செய்யும் வ்ருத்தி பிராட்டி ஆசைப்பட்ட விருத்தி. முன்னே சென்று वीथीशोधनம் செய்வது. ஆசார்யர்கள் எழுந்தருளத் தகுந்ததாய் இருக்கிறதோ? என சோதிப்பது மற்றும் ஸ்ரீமதாண்டவனே இவ்வாறு நியமித்தபடி என்றார்.

சிறிது நேரம் கழித்து வெகுதொலைவு இருவரும் முன்னே சென்று விட்டோம். உடன் ஸ்வாமி, "சற்றே நிற்கலாம். அதிகமாக முன் செல்லக்கூடாது. वीथीशोधकனாக இருக்க வேணுமே தவிர

अत्यन्त पुरोगामियாகவும் கூடாது. पुरोभावियாகவும் கூடாது" என்றார். ஆசார்யனுக்கு ஸம்பந்தமில்லாது செல்பவனாகவோ, எதற்கெடுத்தாலும் पूर्वपक्षம் அல்லது आक्षेपिப்பவனாகவோ கூடாது என்றார். இருவரும் ஸ்ரீமதாண்டவன் அருகே எழுந்தருளும்வரை நின்று, ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியபின், பின் தொடர்ந்தோம்.

**<u>मधुरवगार्यः - மதுரவாக் ஆர்ய:</u>**

தினமும் சாற்றுமறை ஸமயம் "சிற்றஞ்சிறுகாலே" தொடங்கி ஆழ்வார்கள் மற்றும் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளை (முற்பகுதிகளை) தமக்குரிய பிறர் செவிக்கினிய குரலில் ஸ்வாமி அநுஸந்திப்பது மிக போக்யமாயிருக்கும். ஆசார்யராதலின் பக்த ஜனங்களுக்கு पूज्यராய் आर्यர் ஆகிறார். ஸ்ரீமத் திருக்குடந்தையாண்டவன் 1973-ம் வருஷம், தம் திருநக்ஷத்ர உத்ஸவ ஸந்தர்பத்தில் ஸ்ரீமதித்யாதி பரகால ஸ்வாமியை ப்ரார்த்தித்து எழுந்தருளப் பண்ணும்படி தம் ஶிஷ்யர்களையும் அபிமானிகளையும் நியமித்தபடி. பல ஆண்டுகள் கழித்து ஸ்ரீபரகலமடத்துக் கோயிலாழ்வாராம் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவனுடனும் அப்போதய பரகாலமடத்து ஸ்வாமியாம் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ப்ரம்ஹ்தந்த்ரஸ்வதந்ர பரகால ஸ்வாமியும் சென்னை எழுந்தருளி பக்தர்களையும் ஶிஷ்யர்களையும் மகிழ்வித்தார். ஸ்ரீமதாண்டவன் மிக மகிழ்ந்து "ஸ்வாமி தேசிகனால் ஆராதிக்கப்பட்ட இப்பெருமாள் தம் ஆராதகராம் பரகாலமடாதிபதி மற்றும் அவர்தம் கோஷ்டியுடன் ஒவ்வோர் ஆண்டும் சென்னை எழுந்தருளவேண்டும். இங்கு ஓர் பரகால மட ஆஸ்தானம் (கிளை) ஏற்படவேணும்" என மங்களாஶாஸனம் செய்தபடி. பூஜ்யரான ஸ்ரீமத் திருக்குடந்தையாண்டவன், ஸ்ரீமத்யாதி பரகால ஸ்வாமி, மற்றும் பல ஆசார்யர்களின் திருவுள்ளத்தை எம்பெருமான் பூர்த்தி செய்துள்ளான். ஸ்ரீமத்யாதி வாகீஶரும் ஒவ்வோர் ஆண்டும் அவ்வாறே மஹநீயர்களின் திருவுள்ளத்தைக் கருத்தில் கொண்டும், ஶிஷ்யர்களின் ப்ரார்த்தனையை ஏற்றும், யாத்ராசிரமங்களைப் பொருட்படுத்தாமல், தம் க்ருபையால் எழுந்தருளுகிறார். "ஆர்யர்" அதாவது "கொண்டாடத்தகுந்தவர் ஆகிறார்".

அவர்தம் திருவடித்தாமரைகளுக்கும் அவரடியவர் குழாத்திற்கும் பல்லாண்டு பாடி தன்யவாதம் சொல்லி மகிழ்கிறேன்.

सत्सम्प्रदायसिद्धोऽयं मन्त्रसिद्धो महामुनिः।
मृदुः मधुरवागार्यो जेजीयाच्छरदां शतम्॥

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥

॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

# ஸ்ரீபரகாலமடம் தந்த பாக்யம்

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம்
கருணாகராசார்யஸ்வாமி, சென்னை.

---

இந்த பாக்யம் அடியேனுக்கு எப்படிக் கிடைத்திருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன்.

அடியேன் பிறந்த்து .க்கு நேரான ஸர்வஜித் ஆவணியில்1947 க்கு நேரான 1949 விரோதி வர்ஷத்தில் அடியேன் திருத்தப்பனாருடைய மஞ்ஜுராமாயணம் என்கின்ற காவ்யம் தசராப் போட்டியிலே பரிசுக்குரியதாகத் மைஸூர் மஹாராஜா ஏற்படுத்திய தேர்ந்தெடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்ளத் திருத்தகப்பனார் திருத்தாயாருடன் மைஸூர் எழுந்தருளிய படி.

அப்பொழுது அடியேன் தமையனார்கள் தமக்கை என்று இவர்கள் மற்றைய உறவினர்களின் பராமரிப்பில் விட்டு விட்டு மைஸூர் யாத்ரையை மேற்கொண்டவ இருந்தனர். அடியேன் இரு வயது நிறம்பாத பாலகன் என்பதனால் அடியேனை மட்டும் உடன் அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது. இது அடியேன் திருத்தாயார் அடியேனுக்குச் சொன்ன தகவல்.

மைஸூரிலே ஸ்ரீபரகாலமடத்திலே அப்பொழுது ஸ்ரீமதபிநவ ரங்கநாத பரகால ஸ்வாமியின் அருளாட்சி மஹா வித்வானும் ரஸிகரும் ஆகிய ஸ்ரீபரகால ஸ்வாமி திருத்தகப்பனாரின் கவிதைகளை ரஸித்து அவரை மிகவும் பாராட்டி ஆதரித்தருளிய படி.

அப்பொழுது அறியாக்காலத்திலே அடியேனையும் அந்த ஸ்வாமி கடாக்ஷித்து அருளியிருக்க வேண்டும்.அதன் பயனே இந்த ஸேவை என்று நம்பிடுகின்றேன் .

-1913ல் அவதரித்தருளிய திருத்தகப்பனாருடைய நூற்றாண்டு விழாவில் மாதம் தோறும் வரும் அவருடைய திரு நக்ஷத்ரமான திருக்கார்த்திகைகளை அவர் ஸம்பந்தப்பட்ட சில க்ஷேத்ரங்களிலே அந்த க்ஷேத்ரத்துடன் தொடர்பைக் காட்டும் அவர் அருளிச் செய்த க்ரந்தங்களில் வித்வத் ஸதஸ் ஆக நடத்தப் பாரித்தோம்.

அதன் படி விஜய வர்ஷம் ஐப்பசி மாதத் திருக்கார்த்திகையை மைஸூர் பரகாலமடத்திலே யாதவாத்ரி ஸ்துதி மஞ்ஜுராமாயணம் என்று இவைகளில் வித்வத் ஸதஸ்ஸுடன் கொண்டாட விழைந்தோம்.

தற்பொழுது சதாபிஷேகம் கண்டருளும் ஸ்ரீமதபிநவ வாகீச ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி மிகவும் கருணையுடன் மைஸூர் பரகால மடத்திலே அந்த வித்வத் ஸதஸ்ஸினை தமது தலைமையிலே நடத்திக் கொடுத்தருளியாயிற்று.

இளவரசனுக்கு ராஜா அருள் செய்த ராஜபுத்ர வரலாற்றை நினைப் பூட்டும் வகையில் ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவன் ப்ரஸாதமாக அடியேனுக்கும் அடியேன் துணைவிக்கும் சால்வை சேலை அனுக்ரஹித்தருளித் ததீயாராதனத்துடன் ஸபையை ஸ்ரீசித்ரகூட மண்டபத்திலே நாடு புகழும் பரிசுடன் நடத்திக் கொடுத்தாயிற்று.

திருத்தகப்பனாரின் திருவாராதன மூர்த்திகள் என்று அடியேன் எழுந்தருளப் பண்ணிச் சென்றிருந்த எம்பெருமானுடைய திருவாராதனத்துக்குக் கூடார்த்த ஸங்க்ரஹம் அருளிய ஸ்ரீமதபிநவ ரங்கநாத பரகால ஸ்வாமி ஜபம் செய்தருளும் மண்டபத்திலேயே இடம் கொடுத்துத் தேவையான வஸதிகளை எல்லாம் செய்து கொடுத்துத் தாமே நேரே எழுந்தருளி அந்த மூர்த்திகளை மங்களாசாஸனம் செய்து உகந்தருளியாயிற்று.

அந்த ஸ்வாமியின் சதாபிஷேக ஸமயத்தில் வெளிவரும் மலருக்கு என்பதால் தனியான பக்தியுடன் **சோம்பாது** எழுதினேன்.

திருத்தகப்பனார் எழுந்தருளிய போது மைஸூர் ஸ்ரீபரகாலமடத்திலே ஸ்ரீஹயக்ரீவ ஜயந்தீ ஸதஸ் **பதினைந்து** நாள்கள் நடந்திருக்கிறது. அப்பொழுது திருத்தகப்பனார் கவனம் செய்த முப்பத்தி ஐந்து சுலோகங்களையும்ம கூடார்த்த ஸங்க்ரஹம் அருளிய ஸ்ரீபரகாலஸ்வாமி அந்த ஸபையிலே திருச்செவி சாத்தி உகந்தருளிய படி.

இவைகளால் திருவுள்ளம் உகந்து ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவன் ஸ்ரீமதபிநவ வாகீச ப்ரஹ்ம தந்த்ர பரகாலஸ்வாமி பல்லாண்டு வையம் மன்னி வீற்றிருந்து அடியோமோடும் பிரிவின்றி விண்ணும் ஆள்வர் மண்ணூடே என்னும் படித் திகழச் செய்ய வேண்டும் என்று வேண்டி வணங்கி நிறைவு செய்கின்றேன்.

**ஸ்ரீத்ரிதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமிஅருளிய**
**வாழித்திருநாமம்**

**<u>ஆண்டாள்</u>**

கமலமுடன் வில்லிபுத்தூர் விளங்கவந்தாள்வாழியே
காரார் நற்றுழாய்க்கானத் தவதரித்தாள்வாழியே
விமலமாம் திருவாடிப் பூரத்தாள்வாழியே
விட்டுசித்தன் வளர்த்தெடுத்த இளங்கிழையாள்வாழியே
அமலத் திருப்பாவை ஐயாறுஅளித்தருள்வாள் வாழியே
ஆகநூற்றெண்ணைந்து மூன்றுரைத்தாள் வாழியே
அமுதனாம் அரங்கனுக்கே மாலையிட்டாள்வாழியே
ஆண்டாள் தம் இணையடிகள் அனவரதம் வாழியே

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

## அடியேனுடைய ப்ரணாமங்கள்

ஸ்ரீமதுபயவே. நாட்டேரி ராஜகோபாலாச்சார்ய ஸ்வாமி, சென்னை.

---

சதாபிஷேக வைபவம் கண்டருளும் 36 ஆம் பட்டம் ஸ்ரீ பரகால ஸ்வாமிக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதனப் பெருமாள் திருவடிகளில் அநேக மங்களாசாஸனங்களை ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்திற்கே பெருமை சேர்க்கும் ப்ராசீன ஸ்தாபனங்களில் ஸ்ரீ பரகால மடம் மிக ப்ரதானமானது. இங்கு ஆராத்ய மூர்த்தியோ, ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஸ்ரீ ஸரஸ்வதீ தேவியே அளித்து, பின்னர் ஸ்ரீதேசிகனாலேயே ஆராதிக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர். ஸ்ரீ தேசிகனின் திவ்யநியமனத்தால் ஸ்ரீ தேசிகனின் ப்ரதம சிஷ்யரான ப்ரம்ஹதந்த்ர பரகால ஜீயரால் காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, திருமலையில் நிலைகொண்டு அங்கு ஸர்வமும் நிர்வஹித்து, இன்று கர்நாடக தேசத்தில் அதிக வ்யாப்தியுடன் , பாரளந்த புகழுடன் விளங்கி வருகிறது.

இதில் தற்சமயம் அபிஷிக்தராய் 1992 முதல் ஆசார்யராக எழுந்தருளியிருக்கும் 36 ஆம் பட்டம் ஸ்ரீ பரகால ஸ்வாமிக்கு வரும் ஜய வர்ஷம் சித்திரை ரேவதி திருநக்ஷத்ரத்தில் மைஸூர் ஸ்ரீ பரகால மடத்தில் அதி விமர்சையாக சதாபிஷேக பூர்த்தி மஹோத்ஸவம் பெரிய வைபவமாக சிஷ்யர்களால் கொண்டாடப்படுகிறது .

வர்த்தமான ஸ்ரீ பரகால ஜீயர் , ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் திருவடிகளில் அந்வயித்து ஸமாச்ரயணம் அனுக்ரஹிப்பட்டவர். ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருவடிவாரத்தில் காலக்ஷேபங்கள் அனுக்ரஹிப்பட்டவர். ஸ்ரீ பரகால மடத்தில் அந்வயித்து பரன்யாஸம், ஸந்யாஸாச்ரமம் அருளப்பட்டவர். ஸந்தர்பம் வாய்த்தபோதெல்லாம் மாறாத அநன்ய பாவத்துடனும் ஸஹஜ ஸௌஹார்தத்துடனும் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்திற்கு பலகால் எழுந்தருள்பவர். ஸ்ரீ பரகால ஜீயர் எழுந்தருளாமல் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தில் அதிமுக்ய வைபவங்கள் நடைபெறா.

எப்போதும் பொது ஜனங்களுக்கும் சிஷ்யர்களுக்கும் அபிமானிகளுக்கும் பரம ஹிதைஷியாக பரிபூர்ண க்ருபையுடனும், வாத்ஸல்யத்துடனும் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதனப்

பெருமாளின் அனுக்ரஹத்தை அளித்துக்கொண்டு, விசேஷமாக இன்றளவும் மைஸூர் ஸம்ஸ்தானத்தின் ராஜகுருவாக ஸகல விதமான கௌரவங்களையும் பரம்பரையாக பெற்று ஶ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தை ஸம்ரக்ஷித்து வரும் ஶ்ரீ பரகால ஜீயர் திருவடிகளில் அநேக மங்களாசாஸனங்களை ஶ்ரீ ரங்கநாத பாதுகா பத்ரிகை மற்றும் வாசகர்களின் சார்பில் பக்தியுடன் அடியேன் சமர்ப்பிக்கிறேன். ஶ்ரீ பரகால ஸ்வாமி பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்து நம் ஸம்ப்ரதாயத்திற்கு நல்லாண்டுகளை அனுக்ரஹித்துக் கொண்டிருக்க ஶ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகைகளை அடியேன் ப்ரார்த்திக்கிறேன்.

**ஶ்ரீத்ரிதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி அருளிய வாழித்திருநாமம்**

**நம்மாழ்வார்**

மன்னுபுகழ்த் திருவிருத்தம் நூறுசொன்னான்வாழியே
மால்பாதத்தாசிரியம் ஏழளித்தான்வாழியே
முன்னுமந்தாதி பதிற்றெட்டேழீன்றான்வாழியே
முந்தைஆயிரமறையை மொழிந்தவள்ளல்வாழியே
கன்னிமதிள்திருக்குரூகூர் வந்தபிரான்வாழியே
காசினிவைகாசி விசாகத்துதித்தான்வாழியே
மன்னுபொருள்நால்வேதம் தமிழ்செய்தான்வாழியே
மகிழ்மணக்கும்குருகையர்கோன் மலரடிகள்வாழியே

**திருமங்கைமன்னன்**

கார்த்திகையில் கார்த்திகைநாள் களிக்கவந்தோன்வாழியே
காசினியில்திருக்குறையல் அவதரித்தான் வாழியே
சார்த்த திருமொழிதன்னைச் சாதித்தான் வாழியே
தாண்டகமோரிரண்டெமக்குத் தந்தவள்ளல் வாழியே
ஏர்த்தஎழுகூற்றிருக்கை இருமடலோன்வாழியே
இம்மூன்றில் நூற்றுப்பத்தொன்பதுளான் வாழியே
வார்த்தபுகழ் குமுதவல்லி மணவாளன் வாழியே
மங்கையர்கோன் மலர்பதங்கள் மாநிலத்துவாழியே

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

## ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீமதுபயவே. பையம்பாடி, சேட்டலூர், ஸ்ரீ. ராகவாசார்ய ஸ்வாமி

நங்கநல்லூர், சென்னை-61

---

**கல்பஸூத்ர வ்யாக்தாவான ஸ்ரீ பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளையான ஸ்ரீ ஆண்டாள்** அருளிச்செய்தது இரண்டு ப்ரபந்தங்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆடிப்பூர நன்னாளில் விட்டு சித்தன் தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்கு துழாய் மாலை சூடிக்கொடுத்து நேயமுடன் திருப்பாவை பாட்டு ஆறைந்தும் தை ஒரு திங்கள் பாமாலை நூற்று நாற்பத்து மூன்றும் அருளிச்செய்தவர் பாடவல்ல நாச்சியார் என்றும், சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் ஸ்ரீ பராசரபட்டரால் போற்றப்படும் ஸ்ரீ கோதைப்பிராட்டியே. ஸாக்ஷாத் பூமிப்பிராட்டியின் அவதாரம். **கருணயா கமலாமிவான்யாம்** என்று **ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்** புகழ்கிறார் கோதை பிராட்டியினைப் பற்றிய ஸ்துதியில். **நாக்கொண்டு மானிடம் பேசவல்ல கவியேனல்லேன்** என்று ஆழ்வார் அருளியது போல் பகவானையே அடைய வேண்டும் என்பதற்காகவே திருப்பாவை எனும் பிரபந்தத்தை அருளிச்செய்தவள். 30 பாசுரங்கள். **நாராயணனே நமக்கே பறை தருவான்** என்று ஆணித்தரமாக முதலில் ஆரம்பித்து அமுதினும் இனிய பெண்ணமுதான ஸ்ரீதேவிப்பிராட்டியை அடைவதற்காகவே **வங்கக்கடல் கடைந்தவன் மாதவனே** என்றும், **கேசவனே** என்றும் முடித்தருள்கிறார். **ஸாக்ஷாத் மன்மத மன்மத:** என்னப்பட்ட பகவான் கண்ணனையே அடைய வேண்டும் என்று **தையொரு திங்களும்** என்று தொடங்கும் திருமொழியை தொடங்குகிறார். நாச்சியாரின் பெயராலேயே இந்த திருமொழி வழங்கப்படுகிறது. இதில் 14 பதிகங்கள். 143 பாசுரங்கள். **ஸத்யகாம: ஸத்ய ஸங்கல்ப:** என்று சுருதி போற்றும் பகவானை அர்ச்சிக்கிறாள் முதல் பதிகத்தில். அடுத்த பதிகத்தில் தீமை செய்யும் சிரீதரனை கோபிகைகள் யமுனா நதி மணல் திட்டில் கட்டிய மணல் வீட்டை சிற்றில் வந்து சிதியேல் என்கிறாள். தேவதாம்சமுள்ள பஞ்ச பாண்டவர்களின் மனைவியான திரௌபதிக்கு வஸ்த்ரம் பிறபாடு தருவதற்காக வேண்டியோ என்னவோ கோபிகைகளின் வஸ்த்ரத்தை குந்தமரத்தின்மீது எடுத்து ஒளித்து வைத்துக்கொண்டான் பால்ய கண்ணன். பாகவதத்தில் சுகப்ரஹ்மத்தின் வாக்யத்தை எடுத்துக்காட்டி **ஸ்ரீ கூரத்தாழ்வான் தத் கீர்த்தனம் பரம பாவனம்** என்று **அதிமானுஷஸ்தவ**த்தில் இவ்விஷயத்தை போற்றுகிறார். துகிலைப் பணிந்தருளாயே என்று மூன்றாம் பதிகத்தில் கோபிகைகளின் நிலையில் இருந்து வேண்டுகிறாள். **யஸ்த்வயா ஸஹ ஸஸ்வர்க:** என்ற வாக்யத்திற்கிணங்க பகவானுடன் சேர்ந்து இருப்பதே ஸ்வர்கம் போல் என்பதற்காக வேண்டி சகுனம் பார்க்கிறாள் நான்காவது பதிகத்தில்.

அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று குயிலை வேண்டுகிறாள். ஸ்ரீ ஆண்டாளுக்கு **நிற்கின்றதெல்லாம் நெடுமால்** என்ற பாசுர வரிகளுக்கேற்ப எல்லா வஸ்துக்களும் பகவானாகவே காட்சி தருகின்றது. ஆறாவதான வாரணமாயிர பதிகத்தில் பகவானை மணம் புரிவதாக கனாக்காண்கிறாள். அவ்விஷயத்தை தனது தோழியிடம் பகிர்ந்து கொள்கிறாள். ஏழாவதான **கற்பூரம் நாறுமோ** என்று தொடங்கும் பதிகத்தில் பகவானின் திருக்கரத்தை விட்டு என்றென்றும் பிரியாத சங்கத்தை **வடமதுரை வாஸுதேவன் கையில் வீற்றிருந்து என்னாளும் மதுஸூதன் வாயமுதம் உண்ணும் சங்கம்** என்று போற்றுகிறாள். அடுத்து **விண்ணீல மேலார்ப்பு** என்று ஒரு அடைமொழியை மேகத்திற்கு தந்து அவற்றை பகவானிடம் தன்னைப்பற்றிக்கூற வேண்டும் என்று **வேங்கடத்து தன்னாகத் திருமங்கை தங்கிய சீர்மார்வற்கு** தூது விடுகிறாள். எட்டாவது பதிகத்தில் ஸுந்தரத்தோளுடையானான திருமாலிருஞ்சோலை அழகரை தன்னாசை நிறை வேற வேண்டி **நூறு தடாவில்வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன், நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன் ஏறு திருவுடையான் இன்று வந்து இவை கொள்ளும்கொலோ?** என்று வேண்டுகிறாள். பத்தாவது பதிகத்தில் **பாடும் குயில்காள் நல்வேங்கட நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் வந்துபாடுமின்** என்கிறாள். 11ம் பதிகத்தில் **தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனார் ஆங்கு அவளைக் கைப்பிடித்த பெண்ணாளன்** என்றும் **அவனது ஊரும் பேரும் அரங்கமே** என்று தாய்மாரிடம் தெரிவிப்பதாக பாசுரம் அருளுகிறாள். பன்னிரெண்டாவது பதிகத்தில் **நந்தகோபாலன் கடைத்தலைக்கே என்னை உய்த்திடுமின்** என்கிறாள். பதின்மூன்றாவதில் **ஆயர்பாடி கவர்ந்துண்ணும் கண்ணன் எனும் கருந்தெய்வத்தின் செம்மையுடைய திருமார்பில் சேர்த்துவிடுங்கள்** என்கிறாள். கடைசியான 14ம் பதிகத்தில் **ஏலாப்பொய்கள் உரைப்பானை பிருந்தாவனத்தில் காண்பவனான பெருந்தாளுடைய பிரான் அடிக்கீழ் பிரியாது இருக்க வேண்டும்** என்று முடித்தருள்கிறாள்.

பகவானின் திருநாமங்கள் பலவாயிரம் உள்ளன. அவற்றில் ஆயிரம் பேருடையான் என்று ஆழ்வார் குறிப்பிடுவதுபோல் ஸஹஸ்ரநாமம் ப்ரஸித்தி பெற்றது. **மஹாபாரதத்**தில் **தர்மா: சாந்தன வேரிதா:** என்று போற்றப்படும் பகுதியில் பீஷ்மர் பகவானை ஸ்தோத்ரம் பண்ணுகிறார். அதில் ஆயிரம் நாமாக்களை எடுத்துக்காட்டி எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்கிறார். அளவிடமுடியாத பெருமைகளையும் நாமாக்களையும் கொண்ட பகவானின் சிறப்புக்கு இதுவும் ஒரு எடுத்துகாட்டே. அதைப்போல் ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த இரண்டு திவ்யமான ப்ரபந்தங்களிலும் பகவன் நாமாக்களையே போற்றிப் பாடுகிறாள். பகவான் பரவாஸுதேவனாகஇருந்து நம்மை ரக்ஷிக்கிறான். அவனே வ்யூஹாவதாரத்தில் நான்கு ரூபங்களை எடுக்கிறான். வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன மற்றும் அனிருத்தனாக வடிவு கொள்கிறான். நான்கு வ்யூஹாவதாரங்களில் ஒவ்வொன்றிற்கும் மூன்றாக மொத்தம் பனிரெண்டு ரூபாந்தரங்களாக கேசவாதிகளை சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. கேசவன் முதல் தாமோதரன் வரையிலான 12 திருநாமங்கள் அனைத்தையும் **ஸ்ரீஆண்டாள்** தமது திருமொழியில் ஆங்காங்கே எடுத்துக் கையாள்வதை இந்த வ்யாஸத்தில் சிறிது அனுபவிப்போம். **ஸ்ரீமத் அபினவ வாகீச ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால மஹாதேசிக**னின் சதாபிஷேகத்தின் அங்கமாக ஒரு மலர் வெளிவர இருக்கின்றது. அதில் சிறிய ஞானத்தனான அடியேனது இந்த வ்யாஸமும் இடம் பெற இருப்பது அடியேன் செய்த பாக்யமே. **நெஞ்சே**

**சொல்லுவோம் அவன் நாமங்களே** என்று **திருவரங்கத்தமுதனார் ஸ்வாமி எம்பெருமானாரைப்** பற்றிய தமது **ராமானுஜ நூற்றந்தாதி**யில் அருளிச்செய்வது போல ஆசார்யன் திருநாமத்தை உச்சரிப்பது மிகவும் அவச்யமாகிறது. ஸ்ரீ கேதாண்டிபட்டி ஸ்வாமி ஸம்ப்ரதாயத்தில் மிக ப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ தேன்கனிக்கோட்டை ஸ்வாமி பகவன் நாமாக்களை உரக்கக் கூறிவிட்டு தமது ஆசார்யனின் திருநாமமான **ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேசிகாய நம:** என்பதை பலமுறை கூறுவாராம். இதிலிருந்து ஆசார்யனின் திருநாமம் மிகமிக உயர்ந்தது என்பதை அறிகிறோம். **தேவு மற்றறியேன் குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித்திரிவனே** என்றல்லவோ **ஸ்ரீ மதுரகவி**களின் திருவாக்கு. இந்த ஜகத் ப்ரஸித்தரான **ஸ்ரீ கேதாண்டிபட்டி ஸ்வாமி** என்று அழைக்கப்படும் **ஸ்ரீ ரங்கராமானுஜ மஹாதேசிகன்** திருவடிவாரத்திலும், அவரது சிஷ்யரான **ஸ்ரீ வரதராமானுஜ மஹாதேசிகன் (தேன்கனிக்கோட்டை ஸ்வாமி)** என்ற மஹானிடத்திலும் ஸ்ரீபரகால மடத்தைச் சேர்ந்த மஹனீயர்கள் ஸம்பந்தம் வைத்துக் கொண்டுள்ளனர். மேற்படி ஸ்வாமிகளின் வார்ஷிக திருநக்ஷத்ரங்களையும் விமர்சையாக கொண்டாடி வருகின்றனர். மற்றும் **ஸ்ரீ கேதாண்டிபட்டி ஸ்வாமி** ஸாதித்துக் கொண்டிருந்த திருப்பாதுகைகள் இன்றளவும் ஸ்ரீ பரகாலமடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பதையும் எல்லோரும் அறிவர்கள். பகவானின் திருநாமத்திலும் ஆசார்யனின் திருநாமத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் ப்ரக்ருதம் சதாபிஷேகம் கண்டருளும் ஸ்வாமியும். மைஸூர் என்கிற நகரத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஸ்ரீ பரகாலமடத்தின் 36வது பட்டத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் நம் ஸ்வாமி பலமுறை சென்னைக்கும் மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கும் விஜயம் செய்துள்ளார். பலமுறை **திருப்பாவை** மற்றும் **நாச்சியார் திருமொழி**களில் உள்ள விசேஷ கருத்துக்களை உபன்யஸித்துள்ளார். கேட்டவர்கள் பரம பாக்யசாலிகள். சென்னை நங்கநல்லூரில் ஸேவை ஸாதித்தருளும் **ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர்** ஸன்னிதியில் ஒரு தனுர்மாதம் முழுவதும் திருப்பாவையில் பொதிந்துள்ள மிக உயர்ந்த கருத்துக்களை பல ஸம்ஸ்க்ருத ப்ரமாண சுலோகங்களையும் மற்றும் ஆழ்வார் பாசுரங்களையும் மேற்கோள் காட்டி மெய் சிலிர்க்க வைத்துள்ளார். ஆகையினாலேயே இந்த ஸமயத்தில் கேசவாதி பன்னிரெண்டு திருநாமாக்களை **ஸ்ரீ ஆண்டாள்** தமது திருமொழியில் கையாண்ட ஆச்சர்யமான விஷயத்தை தெரிவு செய்து கொண்டேன். பெருமை அடியேனைக் கிளியைப் பழக்கி வைக்குமாப்போலே பழக்கி பிழையற பேசுவித்துக் கொண்டிருக்கிற அடியேன் திருத்தகப்பனாரையே சாரும்.

**கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன** என்ற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியின்படி **நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய்** என்று கூறி, **கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் என்னும் இப்பேறு எனக்கருள் கண்டாய்** என்று முதல் பதிகத்தில் எட்டாவது பாசுரத்தில் அருளிச்செய்கிறாள். அடுத்த திருநாமமான **பெற்ற தாயினும் ஆயின செய்திடும் நாராயண** நாமத்தைக் குறிப்பிடும்போது **நாமமாயிரம் ஏத்த நின்ற நாராயணா நரனே உன்னை மாமி தன் மகனாகப் பெற்றால் எமக்கு வாதை தவிருமே** என்கிறாள். மற்றும் **குயிலே இன்று நாராயணன் வரக் கூவாயேல்** என்றும் ஒரு பாசுரத்தில் அருளிச்செய்கிறாள். மேலும் கூறும்பொழுது **நண்ணுறு வாசகமாலை வல்லார் நமோ நாராயணாய என்பாரே** என்றும், **இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் நம்மையுடையவன் நாராயணன் நம்பி** என்றும் அருளிச்செய்கிறாள். அடுத்து மாதவ நாமத்தை கூறும்பொழுது **கள்ள மாதவா** என்கிறாள். பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்து அமுதினும் இனிய பெண்ணமுதான பெரிய பிராட்டியாரை மணந்ததனால் தான் இவ்வாறு அருளிச்செய்கிறாளோ என்று

கூறத்தோன்றுகின்றது. மேலும் **பீதகவாடை உடை தாழப் பெரும் கார்மேகக் கன்றே போல் வீதியார வருவானை விருந்தாவனத்தே கண்டோமே** என்று மாதவனைப் பற்றிக் கூறுகிறாள்.

**மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால் கத்திரபந்தும் அன்றே பராங்கதி கண்டு கொண்ட**து கோவிந்த நாமாவினால்தான். அந்த திருநாமத்தை ஆண்டாள் **கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டே** சொல்கிறாளாம். **வெருவானாள் வாய் வெருவி** என்று **திருமங்கைமன்னனும்** அருளிச்செய்கிறார். **வாயவனை அல்லது வாழ்த்தாது** என்பது **பொய்கைமுனி**யின் திருவாக்கு. அப்படிப்பட்ட **கோவிந்தன் என்பதோர் பேரெழுதி வித்தகன் வேங்கடவாணன் என்னும் விலக்கினில் புகல் என்னை விதிக்கிற்றியே** என்கிறாள் **ஸ்ரீ ஆண்டாள். என் கோவிந்தன் குணம்பாடி** என்கிறாள் மற்றோரிடத்தில். **கூட்டிலிருந்து கிளி எப்போதும் கோவிந்தா கோவிந்தா என்றழைக்கும் துவராபதிக்கு என்னை உய்த்திடுமின்** என்கிறாள் மற்றொரு பதிகத்தில். **பொன்னைக்கொண்டு உரைகல்மீதே நிறமெழ உரைத்தாற்போல் உன்னைக்கொண்டு என் நாவகம்பால் மாற்றின்றி உரைத்துக் கொண்டேன் உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன் என்னையும் உன்னிலிட்டேன்** என்று தமது பெயருக்கு விளக்கம் அருளுகிறார் **ஸ்ரீ பெரியாழ்வார். ஸ்ரீ ஆண்டாளும்** விஷ்ணு என்கிற திருநாமத்தைக் கூறும்பொழுது **புதுவையர்கோன் விட்டு சித்தன் விருப்புடை இன் தமிழ் மாலை வல்லார் விண்ணவர் கோன் அடி நண்ணுவரே** என்றும், **விட்டு சித்தன் தன் கோதை வாய்த் தமிழ் வல்லவர் குறைவின்றி வைகுந்தம் சேர்வரே** என்று விஷ்ணுவின் பெயரை உச்சரித்தவர்கள் பகவான் திருவடிகளில் சரணாகதி பண்ணி வைகுந்தம் புகுவர் என்கிறாள். யார் வைகுந்தத்துக்கு அழைத்துச் செல்வார்கள் என்பதற்கு பதில் மதுஸூதனன் திருனாமத்தைப் போற்றும்போது அருளிச்செய்கிறாள். **மைத்துனன் தம்பி மதுஸூதனன் வந்து என்னைக் கைத்தலம் பற்றுவான்** என்பது **ஸ்ரீ ஆண்டாளி**ன் பாசுரவரிகள்.

அடுத்து அன்றுலகம் அளந்த **திரிவிக்கிரமன் திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம் தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே** என்று **நெல்லொடு கரும்பமைத்து கட்டி அரிசி அவல் அமைத்து வாயுடை மறையவர் மந்திரத்தால் மன்மதனே உன்னை வணங்குகின்றேன்** என்கிறாள் முதல் பதிகத்தில் ஒரு பாசுரத்தில். பிறகும் 12வது பதிகத்தில் கூறும்போது **கூட்டிலிருந்து கிளி உலகளந்தான் என்று உயரக்கூவும்** என்கிறாள். உயர வேண்டும் என்று நினைப்பவர்கள் **ஓங்கி உலகளந்த உத்தமனையே** கூற வேண்டும் என்பது **ஸ்ரீ ஆண்டாள்** திருவாக்கு. **கொண்ட கோலக்குறளுருவாய்ச் சென்று பண்டு மாவலி தன் பெரு வேள்வியில் அண்டமும் நிலனும் அடி ஒன்றினால் கொண்ட வாமனின்** புகழ் பாடுகிறாள். அப்படிப்பட்ட **மதிளரங்கர் வாமனனார் என்னுடைய பெய் வளைமேல் இச்சையுடையரேல் இத்தெருவே போதாரே?** என்கிறாள் 11வது பதிகத்தில் நான்காவது பாசுரத்தில். அடுத்த ஒன்பதாவது திருநாமமான ஸ்ரீதரனைப் பற்றிக்கூறும்போது தான் **பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் பாசத்து அகப்பட்டிருந்தேன்** என்கிறாள் இரண்டாவது பதிகத்து முதல் பாசுரத்தில்.

இந்த்ரியங்களுக்கு தலைவனான ஹ்ருஷீகேசனைப் பற்றிக் கூறுகிறாள் 5வது பதிகத்தில் ஆறாவது பாசுரத்தில். அவன் யாரெனில் **எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் இருடீகேசன்** என்றும், **என் தத்துவனை வரக் கூற வேண்டும்** என்று இளங்குயிலைப் பார்த்து கேட்கிறாள். **பாஞ்சசன்னியத்தை பத்மனாபனோடும்** என்று பத்மத்தை நாபியில் வைத்துகொண்டிருக்கும் பத்மனாபனை **ஆய்ந்தேத்த வல்லார் அவனையே அணுகியிருப்பர்** என்கிறாள் ஏழாவது பதிகத்தில் 10வது பாசுரத்தில். சங்கத்தின் பெருமையைக் கூறும் பதிகமான ஏழாவதில் நான்காவது பாசுரத்தில் **சந்திர மண்டலம் போல் தாமோதரன் கையில்**

**அந்தரம் ஒன்றின்றி ஏறி அவன் செவியில் மந்திரம் கொள்கின்ற** சங்கம் என்கிறாள். இந்திரன் கூட இத்தகைய செல்வம் கிடைக்கப்பெற்றிலன் என்கிறாள்.

**பருந்தாள் களிற்றுக்கு அருள் செய்த பரமன் தன்னை பாரின்மேல்**
**விருந்தாவனத்தே கண்டனம் விட்டு சித்தன் கோதை சொல்**
**மருந்தாம் என்று தம் மனத்தே வைத்துக் கொண்டு வாழ்வார்கள்**
**பெருந்தாளுடைய பிரான் அடிக்கீழ் பிரியாது என்றும் இருப்பரே.**

இது ஸ்ரீஆண்டாளின் கடைசி பாசுரம். இதைக் கூறிக்கொண்டு பாற்கடலுள் பையத்துயின்ற பரமன் அடி பாட வேண்டும் என்ற ஸ்ரீ ஆண்டாளின் திருவாக்குப்படி பகவன் நாமாக்களையும் பாகவதோத்தமரான ஆசார்யனின் திருநாமத்தையும் அனவரதம் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும் என்றும் கூறிப்ரக்ருதம் ஸ்ரீ பரகால மடத்தை தம்முடைய கூடாரையும் வெல்லும் சீர் குணங்களால் அலங்கரித்துக் கொண்டிருக்கும் **ஸ்ரீமத் அபினவ வாகீச ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால மஹாதேசிக ஸ்வாமி**யின் திருவடிவாரத்தில் அனந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பித்துக்கொண்டு இந்த வ்யாஸத்தை முடித்துக் கொள்கிறேன்.

வாசிகதோஷ: க்ஷந்தவ்ய:

தாஸன் ஸ்ரீ. ராகவன்.

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥

॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

## என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி ...


மங்கலம் ஶ்ரீ.உ.வே. ஶ்ரீகாந்தன்

உதவி பேராசிரியர், ஶ்ரீ அஹோபிலமடம் ஆதர்ஷ ஸமஸ்க்ருத

மஹாவித்யாலயம், மதுராந்தகம்.


---

श्रीमते श्रीलक्ष्मीहयवदन दिव्यपादुकासेवक श्रीमदभिनव वागीश ब्रह्मतन्त्रस्वतन्त्र परकाल यतीन्द्रमहादेशिकाय नमः ॥

ஶ்ரீமத் வேதமார்கேத்யாதி விசேஷண பஞ்சக விசிஷ்டராய் எழுந்தருளியிருக்கும் அஸ்மத் ஆசார்யனின் சதாபிஷேக மஹோத்ஸவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலரில் வ்யாஸம் எழுதுவதற்கு அடியேனுக்கும் வாய்ப்பளித்த ஸ்வாமிகளுக்கு க்ருதக்ஞதையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

हयग्रीवमनाराध्य यस्सर्वज्ञत्वमिच्छति ।

अनालम्बितनौकस्सन् समुद्रं तर्तुमिच्छति ।।

என்கிற ஹயக்ரீவகல்ப ஸ்லோகத்தின் படி இந்த உலகில் ஹயக்ரீவனை ஆராதிக்காமல் யாவரும் பரிபூர்ணமான ஞானத்தை பெறமுடியாதபடியால், ஏறக்குறைய ஶ்ரீபாஷ்யகாரர் முதல் இன்று எழுந்தருளியிருக்கும் நம்முடைய ஆசார்யன் வரை 1000 வருடங்களாக ஆராதித்து வரும் நம் ஹயக்ரீவ பெருமான், நம்முடைய ஆசார்யனான வாகீச-ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமியின் அநுக்ரஹத்தால் நம்மையெல்லாம் மேல்நோக்கி அழைத்து செல்வான் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

हयग्रीवः परं तत्वं हयग्रीवपदं हितम्।

हयग्रीवः परं प्राप्यम् हयग्रीवं नमाम्यहम्॥

என்றபடி சிஷ்யர்களுடைய ஹிதத்திற்காக ஸர்வதா ஹயக்ரீவனையே த்யானித்துக் கொண்டிருக்கும் நமது ஆசார்யன், அடியேனையும் ஒரு பொருளாக்கி அழகு பார்த்தவர். ஸ்ரீரபுரம் அண்ணயார்ய மஹாதேசிகனின் ப்ரசிஷ்யரான வேளூர். ஶ்ரீ.உ.வே. க்ருஷ்ணமாச்சார்யரின் வம்சத்தில் தோன்றியவன் அடியேன் என்பதற்காக, அந்த ஸ்வாமி மீது நம்முடைய ஆசார்யன் பால்யத்திலிருந்து கொண்ட பக்தியின் காரணமாக அடியேன் மீதும் மிகுந்த பாசம் கொண்டு பல சந்தர்பங்களில் அடியேனைப் பரீக்ஷித்து பார்த்தும், பல ரஹஸ்யார்த்தங்களை போதித்தும் ஆசி வழங்கியுள்ளார். ரஹஸ்யார்த்தங்களை போதிக்கின்ற சமயங்களில் எல்லாம், பால்யத்தில் வ்யாகரண ஸூத்திரங்களை **कण्ठस्थं** செய்ததையும்,

ரஹஸ்யத்ரயஸார பங்க்திகளையெல்லாம் ஒன்று விடாமல் மனப்பாடம் செய்து பெரியபரகால ஸ்வாமியிடத்திலும், திருக்குடந்தை ஆண்டவனிடத்திலும் பரீக்ஷை கொடுத்ததை நினைவு கூர்வார். பால்யத்தில் வாஸித்தவைகளை ஒரு அக்ஷரம் கூட மறக்காமல் எப்படி சொல்லமுடிகிறதோ என்று பலமுறை, மந்தபுத்தி உள்ளவன் அடியேன் என்பதால் யோசித்ததுண்டு. ஹயக்ரீவனையே ஸர்வதா த்யானம் செய்பவருக்கு வித்யாஸ்தானத்தில் என்றுமே முதலிடம் உண்டு என்பதை நம்முடைய ஆசார்யனை வைத்து நம்மால் என்றுமே தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும்.

विदुषा ब्राह्मणेन इदं अध्येतव्यं प्रयत्नतः।

शिष्येभ्यश्च प्रवक्तव्यं सम्यङ्नान्येन केनचित्॥

என்கிற மநுஸ்ம்ருதிபடி, அடியேனுடைய மாதாமஹர் வேளூர் ஸ்ரீ.உ.வே. சுந்தரவரதாச்சார்யார் ஸ்வாமியினிடத்தில், நம் ஆசார்யன் அடியேனை சாஸ்த்ராத்யாயனம் பண்ணும்படி சாதித்தார். அதைச் செவ்வனே ஏற்று அடியேனுடைய மாதாமஹர் அடியேனுக்கு பஞ்சஸமஸ்கார-பரண்யாசங்களை செய்துவைக்கும்படி நமது ஆசார்யனை ப்ராத்தித்துக் கொண்டார். அதன்படியே அடியேனுக்குச் செய்துவைத்து **आचारहीनं न पुनन्ति वेदाः** என்றபடி ஒரு காலமும் ஆசாரத்தையும் ஸ்வதர்மத்தையும் விடக்கூடாது என்று கட்டளையிட்டார்.

நம்முடைய ஆசார்யன் சிஷ்யர்களுக்கு ஹிதத்தை செய்வதிலும், பண்டிதர்களை பாலனம் செய்வதிலும் அவருக்கு நிகர் அவர்தான். **न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते** என்ற உபநிஷத் வாக்கியமானது எம்பெருமானுக்கு எப்படி பொருந்துமோ அதுபோல நம்முடைய ஸ்வாமிக்கும் பொருந்தும். கடந்த ஆறு வருடங்களாக பரகாலமட வித்வத் ஸதஸ்ஸில் அடியேனுக்கும் வாய்ப்பளித்து அடியேனையும் அநுக்ரஹிக்கிறார்.

நம்முடைய ஆசார்யனை மனதில் த்யானிக்கும் பொழுது திருமூலரின் செய்யுள் ஒன்று தோன்றுகிறது.

“யாவருக்குமாம் இறைவருக்கு ஒரு பச்சிலை
யாவருக்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவருக்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவருக்குமாவது இன்றுரை தானே!”

ப்ரதிதினம் ஹயக்ரீவ ஆராதனம் செய்துகொண்டும் சிஷ்யர்களை ரக்ஷித்தும் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற, நம் ஸ்வாமிக்கு மங்களம் என்றும் நிலைத்திருக்கவேண்டும் என்று ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனை ப்ரார்த்தித்துக் கொள்வோம்.

॥ श्रीः॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः॥

# ஆசார்யனிடம் நான் அனுபவித்த குணங்கள்

ஸ்ரீ K. மாதவசிம்மன் ஸ்வாமி, பெங்களூரு.

---

श्रीमन्नूतन रङ्गनाथ यतिराट् ***आप्तात्म विद्यालयं*** । श्रीमन्नूतन लक्ष्मणार्य यतिराट् संप्राप्त तुर्याश्रमम् ।।

श्रीवासेन्द्र कटाक्ष संतत सुधा ***लक्ष्यात्म योगाश्रितं*** । श्रीमन्नूतन वागधीश यमिनं भक्त्याश्रयामोगुरुम् ।।

नव्य वागीश योगीन्द्र हयास्य पद सेविनं । ब्रह्मतन्त्र स्वतन्त्रार्यं ***भजामस्वात्मसंपदम्*** ।।

இவ்விரண்டு தனியன்களிலும் இருக்கும் கோடிட்ட பதங்களை அனுசந்திக்கையில் பரவசம் கட்டுக்கு அடங்காதது. பொதுவாக தனியன்கள் அமைவது வித்வான்களின் கை வண்ணத்தாலேயே. நம் பரகால மட ஆசார்யர்களின் பூர்த்தி தனியன்கள் தினமும் காலை சாற்றுமுறையிலும், ஆழ்வார்கள், ஆசார்யர் திருநட்சத்திரங்கள், மற்றும் ஆராதன காலங்களில் அனுசந்திக்கப்படும். 26வது பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீ கண்டாவதார பரகால மஹாதேசிகன் அனுசந்தானத்தின் போதும் "ஸ்ரீ சிங்கரார்ய குருவீக்ஷித ஆத்மவந்தம்" என்கிற பதம் உச்சரிக்கையில் பரவசம் ஏற்படுவது போல் தற்சமயம் ஆஸ்தானத்தை அலங்கரிக்கும் ஸ்வாமியின் ஆத்ம குணத்தையே ஐஸ்வர்யமாகக் கொண்டு இருக்கும் நம் ஸ்வாமியின் தனியன்கள் உச்சரிக்கையில் அதே பரவசம் பன்மடங்காக இருக்கும். ஆத்மா, ஆத்மகுணம் விஷயமாக ப்ரமாணங்களை முன்வைக்கிறேன்.

A. आश्रमदर्शनेतं आत्मानं पुनीमहे *காளிதாஸன் சாகுந்தலம்*

B. गोपायन्ति कुलस्त्रिय: आत्मानं आत्मना *மஹாபாரதம்*

C. आत्मेश्वराणां न हि जातु विघ्ना:

D. पुत्रं लभस्य आत्मगुणानुरूपं भवन्तं ईड्यं भवत: पितेव *ரகுவம்சம்* -5

E. दैवं निहत्य कुरु पौरुषं आत्मशक्त्या *பஞ்சதந்த்ரம்*

F. सर्व भूतेषु आत्मानं सर्व भूतानि आत्मनि ।

समंपश्यन आत्मयाजी स्वराज्यं अधिगच्छति ।। *மனுஸ்ம்ருதி*

G. अहं मद्रक्षणभरो मद्रक्षणफलं तथा ।

न मम श्रीपतेरेवेत्यात्मानम् निक्षिपेत् बुध:।।

ந்யாசதசகம் முதல் ஸ்லோகத்தில் "தத்துவ ஞானம் பெற்றவன் நான் எனப்படும் இந்த ஆத்மா எம்பெருமானுக்கு உரியவன், என்னை காக்கும் பொறுப்பு எம்பெருமானுடையது இதனால் வரும் பயனும் எம்பெருமானுடையது என்று எண்ணி ஆத்மாவை சமர்பிக்க வேண்டும்" என்கிறார் ஸ்ரீஸ்வாமிதேசிகன்.

பூர்வாஸ்ரமத்திலேயே எண்ணற்ற தடவை பலவகையான மந்த்ரங்களின் ஜபத்தினால் தான் இந்த மாதிரியான आत्म विद्यालयं, लक्ष्यात्म योगाञ्चितं, आत्म संपदम् என்ற பதங்கள் கொண்டு தனியன்கள் நம் போன்றவர்கள் உச்சரிக்க அமைந்து இருக்கிறது. கவனம் பண்ணியவர்களும் பாக்யம் பெற்றவர்கள்.

<u>**உத்ஸாஹம்**</u>. ஸ்ரீஸ்வாமியின் திவ்யமான வாக்கில் ஸர்வ சாதாரணமாக வார்தாலாபங்களில் உச்சரிக்கப்படும் பதம் உத்ஸாஹம். உத்ஸாஹம் குன்றக்கூடாது. வளரணும். பிறரை உத்ஸஹிக்கச் செய்வது அவ்வளவு சுலபமானதல்ல. இது ஸ்வாமியினிடத்தில் இயற்கையாகவே குடிகொண்டிருக்கிறது.
நம் மனக்கவலைகள் மறைந்து புத்துணர்ச்சி ஏற்படும். இது மிக்க, தலைமையான குணம் நிரம்பி சிஷ்யர்களிடத்தும் , கைங்கர்யபரர்களிடத்தும், அபிமானிகளிடத்தும் வழங்குபவர்.
ஜாம்பவானால் உத்ஸஹிக்கப்பட்ட ஆஞ்சநேயர் கூறுவது :

उत्सहेयं हि विस्तीर्णं आलिखन्तमिवाम्बरम् ।
मेरुं गिरिमसङ्गेन परिगन्तुं सहस्त्रश:।।

ஹரிவம்சம் பவிஷ்யபர்வத்தில்

उत्साह: सर्वदाकार्यो निरुत्साहो न यत्नत ।।

ஹிதோபதேசம்

मम उत्साह:भङ्ग मा कृथाः ।।

காளிதாசன் குமாரசம்பவத்தில் 22 அரசர்களுக்கு வேண்டிய மூவகை சக்திகளில் உத்ஸாஹம் முதலிடம்
பெறுகிறது. மற்றவைகள் ப்ரபு சக்தி, மந்திரிகளின் ஆலோசனை என்கிறார்.

<u>**ஸ்வபாவம்**</u> : மிகப்பெரிய தொன்மையான விசாலமான இடத்தில் மைசூரில் அமைந்து இருக்கிறது பரகால மடம் ஆஸ்தானம். கைங்கர்யபரர்களும், அபிமானிகளும், சிஷ்யர்களும் சஞ்சாரம் செய்யும் இடம். அவர் அவர்கள், அவர்களுக்கு இட்ட கைங்கர்யங்களை செய்வதும், மேற்பார்வை செய்வதும் காலா காலங்களில் செய்யப்படுவதில் கவனமும், எந்தவிதமான புகார்களும் இல்லாமல் நிர்வஹிக்கவேண்டிய ஆஸ்தானம்.
இதில் எதாவது குறைகள், மற்றவர்கள் மேல் ஒருவிதமான புகார் செய்வது போல் சொன்னால் தண்டனை, கோபப்படுதல் ஒன்றும் கைகொள்ளாது 'அது அவனுடைய சுபாவம்' எனச்சொல்லி

அமைதியாக புகாரைத் தன் மனதில் ஏற்றுக்கொள்ளும் பாங்கு எந்த விதத்திலும் யாரையும் புண்படுத்தாது. स्वभावो दुरतिक्रमः என்ற சுபாஷிதத்தின் வசனத்தை கடைபிடிப்பார்.

உலகம் தோன்றியதுமுதல் ஓவ்வொரு ஜீவனும் ஸ்ருஷ்டிக்கப்பட்டது இயற்கையால் அமைந்த குணங்களுடன் கூடியது . அவைகள் எவராலும் பகவானாலும் ஸ்ருஷ்டிக்கப்பட்டது அல்ல என்கிற தத்துவத்தை பூர்த்தி அறிந்து, அதை அனுசரித்தும் அனுசரிக்கும்படியும் போதிப்பவர் .

ஸ்ரீஸ்வாமி தேசிகன் அச்யுதசதகம் சுலோகம் 50 ல் கூறுகிறார் - "அறியப்பட்ட சேதனர்களிடமும், அசேதனங்களிடமும் பரமாத்வாவினுடைய தன்மைகளை, சுவபாவங்களை நன்மை புரியும் எண்ணத்துடன் நல்வழிப்படுத்துபவர்கள் மஹான்கள் என்கிறார். இதை ப்ரத்யக்ஷமாக ஸ்ரீஸ்வாமி "ஸ்வபாவம்" என்று சொல்லும் போது காணலாம்:

स्वभावात् क्षयमायाति स्वभावात् भयमेति च ।

स्वभावात् विन्दते शान्तिं स्वभावाच्च न विन्दति ।।

நம்மடத்தின் பெயரில் திருமங்கை ஆழ்வாரின் திருநாமங்களால் பரகால மடம் என்ற பெயருடன் குறிப்படப்படுகிறது. அவர் அனுக்ரஹித்த பெரிய திருமொழியிலிருந்து ஒரு பாசுரம்:

"தம்மையே நாளும் வணங்கித்தொழுவார்க்கு
தம்மையே ஒக்க அருள் புரிவராதலால்
தம்மையே நாளும் வணங்கித் தொழுது இறைஞ்சி
தம்மையே பற்றா மனத்தென்றும் வைத்தோமே. 11-3-5.

"எல்லா நாளும் வணங்கித்தொழுவோர்களுக்கு தம்மையே ஓத்து இருக்கும்படி அருள்செய்வார் எம்பெருமான். இப்படி அருள்செய்பவரை எப்போதும் அடையப்பட வேண்டியவராக மனதில் வைத்தோம்" என்கிறார்.

ஸ்ரீஸ்வாமி தேசிகனின் ஸ்தோத்ரங்களில் ஒன்றான "ந்யாச விம்சதி"யில் 2வது சுலோகத்தில் கூறுவதைப் பார்ப்போம். இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீஸ்வாமியின் உரையுடன் கூடியது. எம்பெருமான் தன்னையே வணங்கித் தொழோவோர்களுக்குச் செய்கின்ற உதவியெல்லாம் ஆசார்யன் திறம்பட செய்கின்றார் என்கிறார்:

अज्ञान ध्वान्तरोधात् अघपरिहरणात् आत्मसाम्यावहत्वात् ।

जन्म प्रध्वंसि जन्म प्रदगरिमतया दिव्यदृष्टिप्रभावात् ।।

निष्प्रत्यूहानृशंस्यात् नियतरसतया नित्यशेषित्वयोगात् ।

आचार्यः सद्भिः अप्रत्युपकरणधिया देववत् स्यादुपास्यः ।।

இச்சுலோகத்தை பகவானுக்கும் ஆசார்யனுக்கும் பொருந்தும்படி இருக்கிறது - ஒரு பட்டியல் இடுவோம்:

| எம்பெருமான் | ஆசார்யன் |
| --- | --- |
| 1. எம்பெருமான் அக்ஞானமாகிற இருளை போக்குகிறான் | 1. ஆசார்யன் நல்ல உபதேசங்களைச்செய்து அக்ஞானத்தை நீக்குகிறார். |
| 2. எம்பெருமான் சேதனர்களின் பாபத்தைப் போக்குகிறான் | 2. ஆசார்யன் சிஷ்யர்களை திருத்தி பாபம் நீங்கச் செய்கிறார். |
| 3. எம்பெருமான் ஓர் உபாயத்தைச் செய்து சேதனர்களை தன்னைப்போல் ஆக்குகிறான் | 3. ஆசார்யன் ஞானம், குணம், அனுஷ்டானம் கற்பித்து தன்னைப்போல் ஆக்குகிறார். |
| 4. எம்பெருமான் சம்சார ஜன்மத்தை நீக்கி தன்னைப்போல் ஆக்குகிறான் | 4. ஆசார்யன் தாய்வயிற்றில் பிறந்த பிறவியை நீக்கி ஞானப்பிறவியை அளிக்கிறார். |
| 5. எம்பெருமான் சத்வகுணம் தலை எடுக்கச்செய்து மோக்ஷத்தில் விருப்பம் உண்டாக்குகிறான் | 5. ஆசார்யன் எத்தனை இழிகுணம் படைத்தவராயினும் நல் போதனையால் நற்கதி அடையச் செய்கிறார். |
| 6. எம்பெருமானின் கருணை தாழ்ந்தவர்களிடத்தில் தடை இன்றிச் செல்கிறது | 6. ஆசார்யன் கருணையும் சிஷ்யர்களிடத்தில் எல்லையற்று சுரக்கின்றது. |
| 7. எம்பெருமான் எந்நாளும் தெவிட்டாத அமுதமாய் உள்ளான் | 7. ஆசார்யன் இம்மையிலும் மறுமையிலும் எந்நிலையிலும் அனுபவிக்கப்படும் இன்பப் பொருளாய் உள்ளார். |
| 8. எம்பெருமான் ஒழிக்கவொண்ணாத உறவு உடையவன் | 8. ஆசார்யன் சம்பந்தமும் சிஷ்யர்களுக்கு நீக்கமுடியாதது. |

**<u>क्षमा</u>** : பொறுமை என்னும் குணம் ஒரு கோயிலாகவேகொண்டு இருக்கிறது. இந்த விஷயத்தில் யாரும் மறுப்புகூற வரமுடியாது. ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் யாதவாப்யுதய மஹாகாவ்யத்தில் அப்பய்யதீக்ஷிதர் உரையிட்ட காவ்யத்தில் சர்கம் 2 வது 32 வது சுலோகம் இதோ :

1. न शापो नाभि चरणं नं वह्निः न विषं तथा ।

नास्त्राणि न च शास्त्राणि यथा तीक्ष्णतमा क्षमा ।।

“சாபம், அபிசாரயாகம், நெருப்பு, விஷம், அஸ்திரம், சஸ்திரம், என்பவைகள் கூர்மையானது அல்ல, பொறுமை மிக்ககூர்மை”

2. हितोपदेशம் கூறுவது:

क्षमा शत्रौ मित्रे च यतीनां एव भूषणम् ।

3. காளிதாசன் ரகுவம்சம் முதல் சர்கத்தில் "பிறருடைய குற்றத்தின் தன்மை அறிந்தும் அவைகளை கூறாது இருத்தல், தனக்கு தீங்கு செய்தவர்களுக்கும் பிரதிவல்லமை இருந்தும் அதைப் பொறுத்தல், தற்புகழ்ச்சி இல்லாமை இவைகள் திலீபனிடம் குடிகொண்டிருந்தன" என்கிறார்.

4. பாதுகாசஹஸ்ரம் अभिषेकपद्धतिயில் கடைசீ சுலோகம். ஸ்வாமி ஶ்ரீ தேசிகன்

अभिषेचयत, स राम :

पदेन वा स्पृशतु पादुके भवतीम् ।

अविशेष महिमा त्वं

क्वा विशेष: क्षमा समतोनाम् ।।

"வாராய் பாதுகையே! அந்த ராமனானவனர் உன்னை தொட்டாலும் தொடட்டும், உன்னைப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்தாலும் வைக்கட்டும், நீ குறைவு இல்லாமல் இருக்கிற பெருமை உடைத்தாயிருக்கிறாய் , பொறுமையோடு கூடினவர்களுக்கு ஸ்தோத்ரம் பண்ணினாலும் தூஷித்தாலும் மனது கலங்காது".

மைசூர் அரண்மனை தேவஸ்தானங்களில் ப்ராசீனமான ஶ்ரீமுஷ்ணம் க்ஷேத்ரத்திலிருந்து பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற அம்புஜவல்லீஸமேத ஶ்ரீஸ்வேதவராஹப்பெருமாள் கண்டருளும் ரதோத்ஸவம் சித்திரை ரேவதி. அந்தப்பெருமாள் விஷயமாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் ஒரு சுலோகம் எழுதியும்

वराहरूपिणं देवं शङ्ख चक्र धरं वरम् ।

भूमौ च सहितं भूम्या संस्मरेत पुरुषोत्तमम् ।।

திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் ஶ்ரீரங்கநாதன் ரதோத்ஸவம் கண்டருளும் தினம் சித்திரை ரேவதி. ஶ்ரீ ஸ்வாமி தேசிகன் நயாச திலகம் சுலோகம் (22) ஒன்று வரைந்தும் அனுசந்திக்கும்படி கேட்டுக்கொண்டும்

उक्त्या धनञ्जय विभीषण लक्ष्ययाते

प्रत्याय्य लक्ष्मण मुनेः भवता वितीर्णं ।

श्रुत्वा वरं वदनुबन्ध मदावलिप्ते

नित्यं प्रसीद भगवन् मयि रङ्गनाथ ।।

"பெருமை மிக்க திருவரங்கப் பெருமானே! அர்ஜுனனையும் விபீஷனனையும் இலக்காகக்கொண்ட உன் சொல்லால் நம்பிக்கை ஊட்டி ஶ்ரீபாஷ்யகாரருக்கு உன்னால் அளிக்கப்பட வார்த்தை அறிந்து, அவருடைய சம்பந்தத்தால் செருக்கு நிறைந்து என்னிடம் எப்பொழுதும் அருள் புரிந்திரு" என்கிறார்.

மற்றும்,

தன் அவதாரஸ்தலமான தூப்புல் அருகில் இருக்கும் தீபப்ப்ரகாஸன் என்கிற விளக்கொளி எம்பெருமான் அவதார தினம் மற்றும் ப்ரும்மோத்ஸவம் ரதோத்ஸவம் கண்டருளி பக்தர்களை அநுக்ரஹிப்பது சித்திரை ரேவதி. பிள்ளை லோகாசாரியார் கேட்டுக்கொண்டபடி அனுக்ரஹித்த शरणागतिदीपिका சுலோகம் வரைத்தும் அனுசந்திக்கும்படி பிரார்த்தித்துக்கொண்டும்

इत्थं स्तुति प्रभृतयो यदि संमंता: स्यु: ।
यदूपराध पदवीषु अभिसंविशन्ति ।।
स्तोकानुकूल्यकणिका वशवर्तिनस्ते ।
प्रीति: क्षमा प्रसरयो:अहमस्मिलक्ष्यम्  ।।

“விளக்கொளி எம்பெருமானே இந்த ஸ்தோத்திரம் உனக்கு உகப்பாயிருக்குமோ அல்லது அபசாரவகுப்பில் சேருமோ? எனக்குத்தெரியாது. அடியார்கள் மிகச்சிறிய அளவுக்கு அனுகூலச் செயலைச் செய்தாலும் அதற்க்கு வசப்பட்டு இருப்பது நாடு அறிந்தது. உனக்கு இந்த ஸ்தோத்திரம் உகப்பானால் உன் அன்புக்கு இலக்காகி உன் பொறுமையால் என் பாபங்கள் களையப்பெறுவேன். அபசார வகுப்பில் என் ஸ்தோத்திரம் சேருமானால் அன்பு, பொறுமை (क्षमा) இவைகளின் பரப்புக்கு இலக்காகி நான் உஜ்ஜீவித்துவிடுவேன்.

ஶ்ரீ ஸ்வாமி தேசிகன் கூறியதுபோல் சித்திரை ரேவதியில் சதாபிஷேகம் கண்டருளும் ஶ்ரீ ஸ்வாமியின் திருவடியில் நமக்கும், நம்மைச் சார்ந்தவருக்கும், சிஷ்யர்களுக்கும், அபிமானிகளுக்கும் எல்லையற்ற அன்பையும், பொறுமையையும் அளிக்கவும், திடகாத்திரமாக ஆரோகியத்துடன் ஶ்ரீ ஸ்வாமி ஏளி இருக்கவும் 'ஶ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ, ஶ்ரீ லக்ஷ்மீ நாராயண ஶ்ரீ வேணுகோபாலன் எம்பெருமான்களை -ஶ்ரீ ஸ்வாமியால் தினமும் ஆராதனம் கண்டருளும் எம்பெருமான்களை பிரார்த்தித்துக் கொள்வோமாக "

உத்ஸாஹத்தில் எழுதிய கட்டுரை. பிழைகள் எந்த விதத்தில் இருந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டிக்கொள்கிறேன்.

॥ श्रीः ॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः ॥



॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः ॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः ॥

# நமது ஆசார்யரிடம் கண்ட அரியவை

श्रीमदभिनव श्रीवागीशब्रह्मतन्त्रस्वतन्त्रपरकालमहादेशिकाय नम:

ஆசார்யர்கள் சிஷ்யர்களை உஜ்ஜீவிக்க தொன்றுதொட்டு பலவகைகளில் பேருபகாரம் பண்ணிக்கொண்டு வருகின்றனர். தேச, கால, மற்றும் சிஷ்யவர்க்கத்திற்கேற்ப அவர்களின் உபகாரங்கள் அமைவதாக உள்ளதை நாம் காணமுடிகிறது. சிலருக்கு சாஸ்த்ர ஜ்ஞான ஸம்பத்தை கொடுத்தும், சாஸ்த்ரஜ்ஞானமுள்ள ஜீவர்களுக்கு ஆத்மகுணத்தை வளரச்செய்தும், சாஸ்த்ரஜ்ஞான-ஆத்மகுணமுள்ள சிஷ்யர்களை ப்ரஹ்மஜ்ஞானிகளாக்கியும், இதர ஜீவர்களை ஸத் வழிகளில் நடத்திச்சென்று பகவந் நிக்ரஹத்திலிருந்து (உபாயம் பண்ணுவித்து, அந்த உபாயத்தால்) விடுவித்து, பகவத் அநுக்ரஹத்துக்குப் பாத்ரமாக்கியும் உஜ்ஜீவிக்கிறார்கள். அது எங்ஙனே எனில், "सिद्धं सत्संप्रदाये" என்றபடி நிற்கும் ஆசார்யன் மந்த்ரஸித்தி முதலானவகைகளால் பகவானை ப்ரத்யக்ஷமாக நித்யஸூரிகளைப் போன்று ஆராதித்தும்-உபாஸித்தும், திவ்யதம்பதிகளிடம் முறையிட்டு அவர்கள் கருணையால் அந்தந்த ஜீவர்களிடம் ஸத்ப்ரவ்ருத்தியை உண்டுபண்ணி நல்வழிப்படுத்தி உஜ்ஜீவிக்க வழிவகுக்கிறார். இதனாலேயே ஸ்வாமிதேசிகன் ஆசார்யனை "आचार्यादिहदेवतां समधिकामन्यां न मन्यामहे" என்றும், ஆசார்ய வேஷத்தில் இப்ப்ரபஞ்சத்தில் ஸஞ்சரிப்பது நாராயணனே என்றும் கொண்டாடுகிறார்.

இந்த வருஷத்தின் ஸதாபிஷேக நாயகரான நம் ஸ்வாமி - ஸ்ரீமதபினவ வாகீச ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ர பரகாலமஹாதேசிகன் - தமது மந்த்ரஸித்தியினாலே தம்முடைய சிஷ்யர்களைக் காப்பாற்றி, அவர்களை நித்ய பகவத் கைங்கர்யங்களை செய்பவர்களாக மாற்றி, பின்னர் ப்ரபத்தி உபாயத்தால் ஸ்ரீவைகுண்டப்ராப்தியில் கிடைக்கும் நித்ய பகவதநுபவத்திற்கு ஏற்ற ஜீவர்களாக மாற்றியருளிவருகிறார்.

हयग्रीवमनाराध्य यस्सर्वज्ञत्वमिच्छति ।

अनालम्बितनौकस्सन् समुद्रं तर्तुमिच्छति ।।

என்ற ஹயக்ரீவ கல்ப ஸ்லோகத்தின்படி ஜ்ஞான விசேஷத்துக்கு அவஶ்யமான ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவ மந்த்ரங்கள் பல, வெவ்வேறு மஹான்களால், ஸ்வாமிக்கு

உபதேசிக்கப்பட்டுள்ளன. இதன் பலனாக நம் ஸ்வாமிக்கு ஸ்ரீஹயக்ரீவனின் அர்ச்சாவதார ஆராதன பாக்யம் சிறுவயதிலிருந்தே கிட்டிற்று. திருமாலின் திவ்யமங்கள விக்ரஹ ஆராதனம் பாபங்களை அண்டவிடாமல் காத்து, ஜ்ஞான-வைராக்ய-ஆத்மகுணங்களை வளர்க்கும் பெருமையுடையதால், நம் ஸ்வாமிக்கு சிறு வயதிலிருதே வைராக்யத்துடன் கூடின கல்யாணகுணங்கள் ஏறிட்டது போலும். ஸ்வாமியின் ஆஸ்ரமத்திருநாமமும் அவர் ஸதாஸர்வகாலமும் த்யானித்துவரும் வாகீசரையே ஏற்று நின்றது. மேலும், இந்த ஆராதனமூர்த்தி ஸ்ரீஹயக்ரீவனின் ப்ரேரணையால் ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன், தில்லைஸ்தானம் ஸ்வாமி, வேலூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீமதபினவ ரங்கநாத ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி, மற்றும் பல மஹான்களிடம் அநேக மந்த்ரோபதேசங்கள் நம் ஸ்வாமிக்கு ஆனதாகவும், பின்பு, மைசூருக்கருகில் இருக்கும் ஏரியில், சாஸ்த்ரப்படி கழுத்தளவு ஜலத்தில் நின்று மந்த்ரங்களை ஆவ்ருத்தி செய்ததாக ஸ்ரீமத் பரவாக்கோட்டை ஆண்டவன் ஸ்வாமியும், பல பெரியோர்களும் சொல்லிக்கேட்கையில், இந்த ஸ்வாமியிடம் ப்ரத்யக்ஷமாக நாம் அநுபவித்துவரும் மந்த்ரஸித்தியின் ப்ராமாணிகம் ஸந்தேகமின்றி தெளிகின்றது.

**<u>ஜ்ஞானம்:</u>** ஜ்ஞானத்தின் மூல தெய்வமான ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனின் ஆராத்ய அநுக்ரஹத்தால் பல மஹான்களிடம் ஒருமுறையிலேயே சாஸ்த்ரம், வேதாந்தம் முதலியவைகளை கற்றறிந்தார் என்பதில் ஒன்றும் வியப்பில்லையே. இன்றும் ஸ்வாமி அவ்வப்போது ஸ்ரீபாஷ்யம், அதிகரணஸாராவளி, ந்யாயபரிஸுத்தி, தத்வமுக்தாகலாபம், ரஹஸ்யத்ரயஸாரம், சிறிய ரஹஸ்யங்கள், திருவாறாயிரப்படி முதலிய பல க்ரந்தங்களிலிருந்து பங்க்தி வாக்யங்களை மேற்கோள் காண்பித்து விளக்குவது சிஷ்யர்களுக்குத் தெரிந்ததே. இதுபோல் பல தடவை அநேக க்ரந்தங்களிலிருந்து சிறு வயதில் எப்பொழுதோ காலக்ஷேபத்தில் கேட்ட பங்க்தியை அப்படியே க்ரந்தத்தை மறுமுறை பாராமலேயே சொல்லியாகிவிடும். இவை நமக்கு வியப்பை ஏற்படுத்தும். ஸமீபகாலத்தில் ஸ்வாமி அந்த க்ரந்தங்களை கையில் எடுத்து வாசிக்க ப்ரஸக்தியே இருந்திருக்காது. ஆனால் எப்படி பல வருடங்களுக்கு முன் க்ரந்த காலக்ஷேபமாகக் கேட்டது ஞாபகம் இருக்கிறது என்று கேட்டால், "மறந்துவிட்டது, கொஞ்சம் மட்டும் ஞாபகம் உள்ளது" என்று ஒரு பெரிய பங்க்தியை சொல்லியாகிவிடும். அல்பஞானர்களிடம் கூட வித்யாவிநயத்தை இன்றும் (இந்த திருநக்ஷத்ரத்திலும்) காட்டிவருவருது "நிறைகுடம் ததும்பாது" என்பதற்கு எடுத்துக்காட்டோ? இப்படியும் நடக்கலாகுமா? என்ற வினாக்கள் நம்மிடையே ஆச்சர்யத்தால் எழும். ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனின் திவ்யமங்கள விக்ரஹ ஆராதனத்தால் ப்ரஹ்மஜ்ஞானியான நம் ஆசார்யன் இப்படி இருப்பதில் ஒன்றும் வியப்பில்லை. இந்த விஷயம் அவ்வப்போது நமக்கு மறந்துபோவதால் வருவதே திகைப்பு.

**<u>ஆசாரம்:</u>** ப்ரஹ்மஜ்ஞானிகளுக்கு ஆசாரம் அவஶ்யமா? என்று ஒரு கேள்விவரக்கூடும். "**क्रियावानेष ब्रह्मविदां वरिष्ठः**" - வர்ணாச்ரம தர்மங்களை விடாமல் அநுஷ்டித்து வரும் ப்ரஹ்மஜ்ஞானிகளே மிகச்சிறந்தவர் என்கிறது உபநிஷத் வாக்யம். மேலும், ஆசார

தர்மங்களில்லாமல் க்ஞானத்தில் மட்டிலும் சிறந்து இருப்பது, நாயின் வால் போல் ஒன்றுக்கும் உதவாமல் நின்றுவிடும் என்று அடியேன் பெரியோர்களிடம் கேட்டதுண்டு. நம் ஸ்வாமி யதாசாஸ்த்ரம் அநுஷ்டிக்கும் யதிராஜர். உஷ:காலத்தில் ப்ராத:காலாநுஸந்தானங்களை முறையே அநுஷ்டித்துவிட்டு நீராட்டத்துக்கு எழுந்தருள்வார். அதற்குப் பிந்தய ப்ராத:கால அநுஷ்டானங்களை தீர்க்கமாக அநுஷ்டிப்பது வழக்கம். தீர்த்தத்தால் இடத்தை ப்ரோக்ஷிப்பது முதல் எல்லா அநுஷ்டானங்களும் சாஸ்த்ரவிதிப்படியே நடக்கும். ப்ரோக்ஷிக்கும் போது ஸூக்ஷ்மமாக கையைக் கவிழ்க்காமலும், திருப்பாமலும் நிமிர்த்தியபடியே பண்ணுமழகையும், நளினத்தையும், சாஸ்த்ரோக்தமாக பார்த்தனுபவிப்பதே தனி ரஸம். அர்க்யப்ரதானம் பண்ணும் ஸமயத்திலும், இவ்வாறான ரஸத்தை அனுபவிக்கலாம். தலையை உயர்த்தி, முதுகுப்புறத் தண்டை நிமிர்த்தி, திருக்கரங்களை தாமரைபோன்று அலர்த்தி நீர்சேர்த்து, பின் குவியவிட்டு உயர்ந்த குதிகால்களுடன் தீர்த்தத்தை அர்க்யப்ரதானம் செய்வது தனி அழகு - அதில் ஆசாரசீலத்வம் ப்ரதிபலிக்கும். நமக்கும் அதுபோல் உபதேசிப்பது வழக்கம். அடியேன் ப்ரயாணிக்கப்போகிறேன் எனத்தெரிந்தால், "ப்ரயாணத்தின் போதும், அர்க்யப்ரதான வேளைகளில், அதற்கான தகுந்த இடத்தில் வாகனத்தை நிறுத்தி அர்க்யப்ரதானத்தை செய்துவிட்டபிறகே முன்பிரயாணத்தை தொடர்" - என்று நியமித்தாகும். கையலம்பும் போதும், முன் பின் கைகளையும், மணிக்கட்டு வரையிலும் அலம்புவதையும் கவனிக்கலாம். அதையே ஸன்னிதி கைங்கர்யர்களிடமும் அநுஷ்டானப்படுத்துவார். இதுபோல் பல சின்ன விஷயங்களாக நமக்குத் தோன்றும் ஆசாரங்களைக் கூட சிறிதும் கோணாமல் கையாண்டு, பிற கைங்கர்யபரர்களையும் அதை அநுஷ்டிக்க வைத்து, சுத்தமான திருவாராதன கைங்கர்யங்களை ஸ்வாமி நடத்திக்கொண்டு வருவது இக்காலத்தில் நமக்கு ஆச்சர்யத்தையே அளிக்கின்றது.

**<u>வைராக்யம்:</u>** நம் ஸ்வாமியின் வைராக்யம் மிகவும் ப்ரபலமானது. ஒருவரிடத்திலும் எந்தவித உபகாரத்தையும் எதிர்பார்க்காமல், தமது கார்யத்தை இந்த திருநக்ஷத்ரத்திலும் செய்துகொண்டு இருப்பதும், கைங்கர்யபரர்கள் குறைவாகவோ, இல்லாமல் போகும் ஸமயங்களிலும் கூட தானே பகவதாராதனத்துக்குண்டான ஸகல கார்யங்களையும் பாங்காகவே செய்து, எவ்வளவு மணிநேரம் கூடுதலாக ஆனாலும் அதே நேர்த்தியுடன் ஸர்வ உபசாரங்களையும் ஸமர்ப்பித்து, சற்றும் அயர்வில்லாமல் பக்தர்களுக்கு தீர்த்தப்ரஸாதம் அருளும் அவரது வைராக்யத்தைப் பார்த்தால் நமக்கு வியர்த்துவிடும். அவ்வளவு கடும் தபஸ்வியாக இருப்பதால்தான், ஸ்வாமி இந்த முதிர்ந்த திருநக்ஷத்ரத்திலும் இவ்வாறெல்லாம் கடைபிடிக்க முடிகிறது போலும். ஸ்வாமிக்கு, அதற்குத் தக்க தேஹஸௌகர்யத்தையும், ஆசார்ய லக்ஷணமான வைராக்யத்தையும் கொடுத்தருளிக்கொண்டிருக்கும் ஶ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனிடம் என்றும் பல்லாண்டு பல்லாண்டுடன் திடவாரோக்யத்துடன் ஸ்வாமி நம்மை அநுக்ரஹித்திருக்குமாரு, நடுவில் ப்ரார்த்தித்துக் கொள்கிறோம். ஸ்வாமி எந்தக் கைங்கர்யத்தை உத்தேசம் பண்ணியும் பக்தர்களிடம் பணமோ, பொருளோ கேட்கவேமாட்டார். "द्रव्यमूलानि पापानि ..." என்ற ப்ரமாணத்தை அடிக்கடிச் சொல்லி, த்ரவ்யத்தை வாங்குவதால் பாபம் கொடுப்பவனிடமிருந்து வாங்குமவனிடம் வந்துசேர்கிறது என்று

சொல்லியாகும். பெரிய கைங்கர்யமோ, சிறிய கைங்கர்யமோ அதை பகவானின் ஆஜ்ஞையாக மட்டுமே கருதி அடியெடுத்து வைப்பார். அதற்குமேல் வேண்டியவைகள் - தனமோ, வஸ்துக்களோ, அந்த கைங்கர்யத்திற்கான தகுந்த பக்தர்களோ, வ்யக்திகளோ - தானே வந்து, கைங்கர்யம் பலிதமாகும். "रूपमेवास्यैतन्महिमानं व्याचष्टे" - ரூபமே (உருவமே) பெருமையை புலப்படுத்தும் என்ற வேத வாக்யத்திற்கிணங்க, நம் ஸ்வாமியின் தேஜஸ் ரூபமான திவ்ய திருமேனியை ஸேவித்தாலேயே அவரது உன்னதமான வைராக்யம் புரிந்துவிடும்.

**ஆத்மகுணம்:** ஸ்ரீகௌதமரிஷி "दया सर्वभूतेषु क्षान्तिरनसूया शौचमनायासो मङ्गलमकार्पण्यमस्पृहा" என்று எட்டுவிதமான (दया, क्षमा, अनसूया, शौचम्, अनायासः, मङ्गलम्, अकार्पण्यम्, மற்றும் अस्पृहा) ஆத்மகுணங்களை தெரிவித்துள்ளார்.

**தயை (दया)** என்ற குணம் பிறரின் துன்பத்தை களைய விழைவது. பிறரின் துன்பத்தை ஸகிக்காதது. தற்காலத்திய மக்களின் ஸ்வபாவம் சிறுதுன்பத்தையும் பொறுக்காமலிருப்பதாகவே உள்ளது. அதனால் அவற்றைக் களைய பலபேரையும் ஆலோசிக்கின்றனர். சிலர் ஆசார்யனிடமும் வந்து முறையிடுகின்றனர். அவர்களது துன்பத்தைக் கேட்டு அதற்குத் தக்க நிவ்ருத்தியை அருளியும், ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனிடம் ப்ரார்த்தித்துக்கொண்டு போகும்படியும் சொல்லி ஸமாதானப்படுத்தி அனுப்பிவைப்பார். அதன்பின், அவர்கள் துன்பம் அகல அதற்காக விசேஷமாக ஜபத்தை அநுஷ்டித்து, ஹயக்ரீவனின் அநுக்ரஹத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி, அவர்களின் கஷ்டத்தை அகற்றுவது வழக்கம். இதை அநேக சிஷ்யர்களின் விஷயத்தில் பார்த்ததுண்டு. அவர்களே திரும்பி வந்து சிக்கல் அகன்றதை தெரிவிக்கும்போது, "எல்லாம் ஹயக்ரீவன் பார்த்துக்கொண்டான்" என்று ஸாதாரணமாகச் சொல்லி மந்த்ராக்ஷதை கொடுத்தருள்வார். அது ஸத்யமான வாக்காயினும், ஹயக்ரீவனின் கருணையைத் தூண்டி அருளவைத்தது ஆசார்யன் அல்லவோ? அப்பேர்ப்பட்ட தயை நம் ஆசார்யருடையது.

அதுமட்டுமன்றி அடியேன் போன்றோர் அனுபவித்தது என்னவென்றால், நம்முடைய துன்பத்தைச் செல்லாமலேயே அறிந்துகொண்டு அதைப் போக்கும் குணம். அடியேனுக்கு எவ்வளவோமுறை அவ்வாறு ஸ்வாமி அனுக்ரஹித்துள்ளார். அவை பல லௌகிகமானதால் அடியேன் இங்கு விஜ்ஞாபிக்க இசையவில்லை. பலமுறை அவ்வாறு அனுக்ரஹித்துள்ளதை நினைத்தால் எவ்வளவு பாக்யசாலி அடியேன் என ஆச்சர்யம் கலந்த ஆனந்தமுண்டாகும். இதுபோன்று ஆசார்யன் இருக்கும்போது அடியேன் எதற்காகக் கலங்கவேண்டும்? அவரை ஸேவித்துக்கொண்டிருந்து "உமக்கே நாம் ஆட்செய்வோம்" என்றிருந்தாலே போதுமே. ஸ்வாமி தேசிகன் அருளியது போல் க்ருதக்ருத்யர்களாக நெஞ்சிலே கையைவைத்து கவலையின்றி உறங்கலாம். துன்பங்கள் அமைவது நமது கருமத்தை போக்குவற்காகவே என்ற ஜ்ஞானமின்றி, சரணாகதி அனுஷ்டித்த பின்பும் இன்னல்களால் கலக்கமுற்றால், அது பலனில்

விளம்பத்தை உண்டாக்கும் என்பதாலேயே, நமது ஆசார்யன் அந்தத் துன்பங்களைக் களைந்து, இன்னல்களால் மனவருத்தத்தை அடையவிடாமல் காக்கிறார் போலும்.

**<u>பொறுமை (क्षमा)</u>** என்ற குணம் தன்னை துன்புறுத்துவரிடமும், வாக்-மனம்-சரீரம் இவற்றை அடக்கி சாந்தமாக இருக்கச்செய்யும். சில அஸுர ப்ரக்ருதிகள் ஸ்வாமிக்கும்/மடத்திற்கும் எதிராக நடந்துகொண்டாலும், சிலர் ஸ்வாமியை புரிந்துகொள்ளாமல் அபசாரங்களில் ஈடுபட்டு துன்புறுத்தினாலும், ஸ்வாமி அவற்றைப் பொருட்படுத்தாது பொறுத்து, அவர்கள் தாமாகவே சரியாகிவிடுவார்கள் என்று மற்றவர்களையும் தேற்றி பொறுமையாக இருக்க வைப்பார்.

**<u>பொறாமையின்மை (अनसूया)</u>** என்பது அயலாரின் நற்குணத்தையும், பெருமையையும் நிந்திக்காமல் இருப்பது. நம் ஸ்வாமி சிஷ்யர்களின் இழிகுணத்தை இடித்துக்கூறி நல்வழிப்படுத்துவார், மற்றும் அவர்களின் பெருமையால் புன்முறுவல் இட்டு அகமகிழ்வார். தம் சிஷ்யர்கள் அல்லாத பிறர்களின் பெருமைகளை சிஷ்யர்களிடம் சொல்லி மகிழ்வார். இது அனைவருக்கும் தெரிந்ததே.

**<u>தூய்மை (शौचम्)</u>** என்பது வாக்-மனஸ்-சரீரத்தால் எவ்விதக் கெடுதியும் செய்யாமலிருப்பது. நம் ஸ்வாமி மேலே சொல்லப்பட்டபடி அண்டிவருபவர்களை ஏமாற்றமடையவைக்காமல் அவர்களின் துன்பம் களைபவர். நேர்மைகெட்டவர்களுக்கு தண்டனை அமையவேண்டும் என்று யாரேனும் சொல்லிக்கேட்டால், உடனே "அப்படிச்சொல்ல வேண்டாம், அவர்களை ஹயக்ரீவன் பார்த்துக்கொள்வார், நல்லது அமையட்டும்" என்றே உபதேசிப்பார். அத்துடன் நில்லாமல், அப்படிச் சொல்பவர்களின் மனத்தையும் மாற்றி அமைத்துவைப்பார். எவருக்கும் "தர்மத்தை கடைபிடித்து, யாரையும் ஏமாற்றாமல் இரு" என்றே உபதேசித்து அனுக்ரஹம் செய்வார். உட்கொள்ளும் உணவிலும் தூய்மை இருக்கவேண்டும், அப்போது தான் மனஸ்ஸும், அது தூண்டும் உடலும் நல்வழியிலே நடக்கும் என்றும் சொல்லுவார். ஸ்வாமி நெருப்பைப் போன்று, சோம்பல் முதலியவற்றையும், இக்கால-தேசத்தால் உண்டாகும் அனுஷ்டான மயக்கங்களையும் எரித்து, சுத்தமான மனத்துடன் தம் சிஷ்டாசாரத்தை நடத்திவருவது அவர் ஸன்னிதியில் இருப்பவர்களுக்குத் தெரிந்ததே. பகவத் திருவாராதனத்திற்கு வாக்-மனஸ்-சரீர தூய்மை மிக அவசியமான அங்கமானதால், இக்குணத்தில் எந்த தோஷமும் வராமலிருக்கவே, இக்குணத்தின் எதிரிகளுக்கு நெருப்பென்று நிற்பது நம் ஸ்வாமியின் நெறி.

**<u>பேராசையின்மை (अनायास:)</u>** என்பது நம்மால் கூடாததிலும், நமது சத்தைக்கு ப்ரதிகூலமான கார்யங்களிலும் ஆசையற்று இருப்பது. பணம் சேர்ப்பதில் முயற்சியற்றிருப்பது நம் ஸ்வாமியின் ஸ்வபாவம். பணம் இல்லாமல் எதுவும் செய்யமுடியாதே? என்று கேட்டால், அவர் "ஹயக்ரீவனுக்கு எது வேண்டுமோ அதை அவனே காட்டிக்கொடுத்து, வந்து சேர வைத்து, நடத்திக்கொள்வான்" என்று ஸாதித்து விட்டுவிடுவார். இதுவரை பரகால மடத்தில்

எது வேண்டுமோ அவைகள் வந்துசேர்ந்து நன்றாகவே ஆராதனங்கள் நடைபெற்றுவருகின்றன. ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனுக்கு பலபலவே ஆபரணங்கள் பொன்னிலும், நவரத்னங்களிலும் ராஜாக்களால் வந்து சேர்ந்தது. தற்போது மடத்தில் நடைபெற்று வரும் கட்டட புதுப்பிக்கும் பணிக்கும் அரசாங்கமும், ஆப்தர்களும் தாமாகவே முன்வந்து வேண்டிய கொடைகளை அளித்துவருகின்றனர். சேர்ப்புநிதியில் அதிக பணம் இல்லாமலேயே அவ்வோ கார்யங்கள் செவ்வனே நடப்பது ஸ்வாமியின் இந்தக் குணத்தினால் தான் போலும்.

ஸ்வாமி பிக்ஷையிலும் அப்படியே. போதிய அளவே - மிகக் குறைவாகவே - எடுத்துக்கொண்டு, மீதத்தை திருப்பியனுப்பி விடும். இது தினந்தோறும் நடக்கும் காட்சி.

**மங்களம் (मङ्गलम्)** என்ற குணம் சாஸ்த்ரத்திலும், பெரியோர்களாலும் அனுமதிபெற்ற நல்ல செயல்களையே செய்தலையும், அதற்கு மாறான தீய செயல்களை செய்யாமலிருக்கும்படியும் வைக்கும். சுருங்கச் சொன்னால் மங்களம் தரும் செயல்களையே செய்வது என்பது கருத்தாகும். சாஸ்த்ரோத்தம அனுஷ்டிதரான நம் ஸ்வாமிக்கு இது இயல்பாகவே பொருந்தியுள்ள குணம். இது யாவரும் அறிந்ததே.

**சாதித்துவைப்பதில் வல்லமை (अकार्पण्यम्)** என்ற குணம் ப்ரபந்நஜனஸந்தானகூடஸ்த்தர் தொடக்கமான ஆசார்யர்களுக்கு, சரணாகதியை ப்ரார்த்தித்துப் பூர்த்திபண்ணிவைக்க மிக முக்யமானது இது. ஆசார்யர்களிடம் தங்களது कार्पण्य அங்கத்தோடு அண்டிவரும் சரணாகதர்களை, அக் कार्पण्यத்தைக் காட்டி, பகவானிடம் भरஸமர்பணம் பண்ணிவைக்கும் ஸமர்த்தரானபடியால், சரணாகதர்களை ரக்ஷிப்பதில் अकार्पण्य வீர்யத்தோடே இருப்பவர் நம்ஸ்வாமி. இது மஹா உபகாரம்.

**பிறர்பொருளில் ஆசையற்றிருத்தல் (अस्पृहा)** என்ற குணத்தால் அயலாரின் பொருளில் ஆசையில்லாமல் இருப்பர். நம் ஸத்ஸம்ப்ரதாய சீலர்கள் "எல்லாம் கண்ணனுடையதே" என்ற भावத்தால் "எல்லாம் கண்ணனுக்கே" என்றபடி இருப்பதாவது. அப்படிப்பட்ட நம் ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் யாவருக்கும் தானாகவே அமைந்த குணமிது.

இவ்வாறாக,

आचारात्मगुणोपाय-पुरुषार्थविशेषत: ।

अधिकारिणि वैशिष्ट्यं प्रकृष्येतोत्तरोत्तरम् ।।

ஆசார்யநிஷ்டரிலும் ஆத்மகுணம் உடையவர் மேம்பட்டவன் என்றபடி நம் ஸ்வாமி ஒன்றைக்காட்டிலும் மற்றொன்றினால் உயர்ந்து உயர்ந்து உயர்ந்தே காண்கிறார்.

**ஆசார்யபக்தி:** நம் ஸ்வாமி தம்மைப் புகழ்தலையோ, தம் திருநக்ஷத்ர விழாக்களையோ விரும்பவேமாட்டார். தன்னுடைய திருப்பாதுகைகளையும் யாரிடமும் கொடுத்ததில்லை. எல்லாம் பூர்வாசார்யர்களே என்றிருப்பவர். பூர்வாசார்ய க்ரந்தங்கள், அவர்களின் ஆசாரம்,

நெறிகள் இவற்றையே பின்பற்றுபவர். பூர்வாசார்யர்களது திருநக்ஷத்ரங்களை மிகவைபவமாக பண்ணவேண்டும் என்பதிலும், அவர்களது க்ரந்தங்களை வெளியிடுவதிலும், ப்ரசாரப்படுத்துவதிலும் மிக தீவ்ரமாக இருப்பது எங்களால் தினமும் காணும் காட்சி.

ஒவ்வொரு துவாதசியன்றும் பூர்வாசார்யர்களின் ஸ்ரீபாதுகாதீர்த்தத்தை தாம் எடுத்துக்கொண்டு, அதையே சிஷ்யர்களுக்கும் கொடுப்பார். ஸ்வாமியின் பாதுகையே மடத்தில் கிடையாது. அது கூடாது, பூர்வாசார்யர்கள் பாதுகைக்கே ஆராதனம் பண்ணவேண்டும் என்பதில் மிக திடம். எந்த சிஷ்யர்கள் வந்து ஸ்ரீபாதுகை கேட்டாலும், பூர்வாசார்ய பாதுகையையே ஏழுந்தருளப்பண்ணித்தந்தாகும்.

ஸ்வாமியின் திருநக்ஷத்ரத்தினை கொண்டாட வைதீக திட்டங்களை வகுக்கும் குழுவினரிடம் அதற்கு ஒப்புதல் அளிக்காமல், அனைத்தையும் முன்னால் வரும் பூர்வாசார்ய திருநக்ஷத்ரத்துக்கு வைத்துக்கொள்ளுங்கள், அதற்காக திட்டம் தீட்டுங்கள், செலவிடுங்கள் என்று பணித்து அதற்காக மட்டுமே மந்த்ராக்ஷதை கொடுப்பார். எவ்வளவு ப்ரார்த்தித்தும் ஸ்வாமி விஷயத்துக்காக எந்த செலவையும் பண்ண அனுமதி கொடுக்கவே மாட்டார். ஆனால், பூர்வாசார்யர்களின் விஷயமாக எந்தத் திட்டம் வகுத்தாலும், அதை நன்கு உற்சாகமாகக் கேட்டு, திட்டத்தில் இருக்கும் குறைகளை சரிபடுத்த வழிகூறி அனுக்ரஹிப்பார்.

பூர்வாசார்ய க்ரந்த கைங்கர்ய விஷயத்தில் அதி கவனம் செலுத்துவார். உதாஹரணமாக, இன்னும் சில மாதங்களில் வெளிவர இருக்கும் "ஸ்ரீகூடார்த்த ஸங்க்ரஹ விசேஷ ப்ரகாசிகா" - ஸ்ரீகூடார்த்த ஸங்க்ரஹ ஸ்ரீஸூக்தியிலிருந்து சில கட்டுரைகள் கொண்ட - நூலின் 'கட்டுரைகள் அபிநவரங்கநாத ப்ரம்ஹதந்த்ரஸ்வதந்த்ர பரகாலஸ்வாமியின் அபிப்ராயத்தை நன்கு வெளிக்கொணர்வதாக இருக்கவேண்டும், அதில் கருத்துப் பிழை இருக்கக்கூடாது' என்று பலமுறை நம்ஸ்வாமி சொல்லியாகிவிட்டது. அவ்வப்போது வரும் கட்டுரைகளை வாசித்து, அதை நாவல்பாக்கம் சடகோப ராமாநுஜதாதாசார் ஸ்வாமி போன்றவர்களிடம் காண்பித்து பரிசீலனம் பண்ணும்படி அடியோங்களுக்கு உத்தரவிடுவார். அவ்வளவு அக்கரை காண்பித்தாகும்.

**<u>மந்த்ரஸித்தி:</u>** பரகால ஸ்வாமி தினமும் பல மந்த்ர ஜபங்களை ஜபித்துக்கொண்டிருப்பவர் என்பது ப்ரஸித்தம். பல சிக்கல்களை நீக்குவது அவரது தவ வலிமையே என்பது எங்களின் ஆழ்ந்த அபிப்ராயம். எப்படி பகவானின் மூச்சுக்காற்றான வேதம் அனைத்துலகையும் ரக்ஷிக்கிறதோ, அது போல் ஸ்வாமியின் தவ வலிமை சிக்ஷ்யர்களை ரக்ஷிப்பதுடன், ஸ்வாமி நடத்தும் கைங்கர்யங்களுக்குத் தடையாய் நிற்பவைகளையும் விலக்கி ரக்ஷிக்கிறது. அடியேன் சந்தித்த பல பக்தர்கள் ஸ்வாமியின் மந்த்ராக்ஷதையால் பல கார்யங்கள் சித்திபெற்றதை தெரிவித்திருக்கிறார்கள். அடியேனுக்கும் அதுபோல் பல கார்யங்கள் ஸ்வாமியின் திருப்பார்வையாலேயே அனுகூலமாகியிருக்கிறது, ஆபத்திலிருந்து காத்திருக்கிறது, மற்றும் வளத்தைக்கொடுத்திருக்கிறது. அடியேன் பலவற்றை மனதால் மட்டுமே

விண்ணப்பித்திருக்கிறேன். அவைகளெல்லாம் அவரது திவ்ய கடாக்ஷத்தாலே நல்லபடியாகவே நடந்துள்ளன.

ஸ்வாமி அடியோங்களை லக்ஷ்மீயுபாயத்வ தீபம் என்னும் பூர்வாசார்ய நூலை வெளிக்கொணரவேண்டும் என்று பணித்தாயிற்று. அந்நூல் ஒரு ஸமஸ்க்ருத க்ரந்தம், ஆனால் தெலுங்கு அக்ஷரத்தில் ப்ரதியாயிருந்தது. தெலுங்கு அக்ஷரத்தில் இருந்ததாலும், பெரிய பெரிய கஷ்டமான ஸமஸ்த்த பதம் கொண்ட பெரிய சூர்ணிகைகளை உடையதாய் இருந்ததாலும், அதை அதன் மூல அக்ஷரமான ஸமஸ்க்ருதத்தில் கொண்டுவர பெரும் கஷ்டமாய் இருந்தது. இதை ஸ்வாமியிடம் விண்ணப்பித்தோம். அதிலிருந்து சில நாட்களிலேயே அதன் ஸமஸ்க்ருதமாக்கப்பட்ட கையேடு எங்களுக்கு ஸ்ரீ.உ.வே. சோகத்தூர் ராமானுஜாசார்ய ஸ்வாமியின் மூலமாகக் கிடைத்தது. இந்த ஸ்வாமி இக்கையேட்டை ஒரு பெண்மணி தம்மிடம் கொடுத்தாகக் கூறி எங்களிடம் கொடுத்தார். அது மட்டும் தக்க சமயத்தில் கிடைக்காமல் போயிருந்தால் இந்தக் க்ரந்தம் இப்போது வெளிவருவதில் தாமதம் இருந்திருக்கும். இது தக்க சமயத்தில் எங்கள் கைகூடிவந்தது ஸ்வாமியாலேயே என்று மகிழ்ந்து ஆச்சர்யப்பட்டோம்.

ஸ்வாமியின் கைங்கர்யத் திருப்பணியில் ஒரு சில தடைகள் தானாகவே ஸ்வாமியின் தவ வலிமையால் நீங்கியதை கீழே விண்ணப்பிக்கிறேன்.

சத்யாகால க்ஷேத்ரத்தில் ஸ்வாமி தேசிகன் சில காலம் தங்கியிருந்தபோது, அங்கு தம் இஷ்ட பரதெய்வமான வரதராஜஸ்வாமியை அர்ச்சாவதாரமாக ஆராதித்தார் என்பது சரித்ரம். அந்த இடத்தில் கோயில் தோன்றி பல வருஷங்கள் ஆனபடியால், அக்கோயிலின் ராஜகோபுரம் பழுதடைந்து சிதைந்த உருவுடன் பல ஆண்டுகளாக இருந்தது. இக்கோயில் பாதுகாப்புகள் குறைந்த சத்யமங்கலம் அருகில் இருக்கும் வனப்பகுதியில் இருப்பதுவே இதற்குக்காரணமாகும். சில காலங்கள் (சுமார் 20-25வருடங்கள்) முன்வரை அந்தக்ஷேத்ரம் காட்டு மிருகங்களாலும், ராக்ஷஸ ப்ரக்ருதிகளாலும் முற்றுகையிட்டு, ஜனங்கள் நித்யவாஸம் பண்ணத் தகாத இடமாகவே இருந்தது. அந்தக்ஷேத்ரத்தில் கோயில்கொண்டிருக்கும் ஸ்வாமிதேசிகனுகனின் விக்ரஹத்திற்கும், அவரது திருவாராதனத்தெய்வத்துக்கும் முன்போல் திருவாராதனாதிகள் நடைபெறவேண்டும் என்ற பூர்வாசார்யர்களின் நியமனத்தை நிறைவேற்ற தக்கசமயம் பார்த்துக்கொண்டிருந்த நம்ஸ்வாமி, அந்த வனக்ராமத்தை முதலில் ஜனங்கள் நடமாடும் இடமாக மாற்றி, கோயிலில் சிறு உற்சவங்களை முதலில் ஆரம்பித்து நடத்தி, படிப்படியாக ஸேவார்த்திகளை வளர்த்து, த்வாரம், ப்ராகாரம், மதில்சுவர் முதலியவற்றை செப்பனிட்டு, பின்பு ராஜகோபுர பணிகளை நிர்ணயித்து அருளினார். இன்று அந்த க்ஷேத்ரத்தில் நித்ய ஆராதனத்துடன், உற்சவாதிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. பல ஸேவார்த்திகள் நித்யம் வருகைதருகிறார்கள். இவ்வனக்கிராமத்தை பூங்காவனமாக்க ஸ்வாமி யாரையும் நிர்பந்திக்கவில்லை. அரசாங்கத்தைவைத்தோ, சிறு படையால் முற்றுகையிட்டோ, இன்னும் வேறுவிதமாகவோ அந்த இடத்தை சிதைக்காமல், இயற்கை மற்றும் அசுரப்ரக்ருதிகளிடம் சிக்கியிருந்த

அந்தப்பகுதியை தன் தபோபலத்தாலும், ஆசார்யபக்தியாலும், அவ்வசுரப் ப்ரக்ருதிகளை தானாகவே இடமாறச்செய்து, அத்தேசத்தை பூங்காவனமாக மாற்றினார் என்பதில் மிகையில்லை. பல தடைகளுக்கு நடுவில், வசதிகள் குறைவான அந்த வனக்ராமத்தை, இன்று பல வசதிகளுடன் காவிரிக்கரையில் நித்யோத்ஸவம் கண்டருளிவரும் க்ஷேத்ரமாக நமக்களித்தது நம்ஸ்வாமியின் மந்த்ரஸித்தியாலேயே என்பது ஸத்யம்.

இதைப்போல் பரகாலமட மூலஸ்த்தானமான திருத்தூப்புல் திவ்யதேசத்தில் இருக்கும் புராதன ஸ்ரீஹயக்ரீவ ஸன்னிதியையும், மடத்தையும் செப்பனிடும் பணியை ஸ்வாமி தொடங்கியுள்ளார். இதுவும் நம்ஸ்வாமியின் மந்த்ர, தப ஸித்தியாலேயே ஸ்ரீஹயக்ரீவன் நிறைவேற்றுவார் என்பதில் ஐயமில்லை.

சிஷ்யர்களாக நாம் நம் பங்கிற்கு தக்க கைங்கர்யங்களைச் செய்யவேண்டியது நம் கடமை. ஆசார்யன் நம்மை இந்த ஸம்ஸார ஜீவதசையிலிருந்து கடைத்தேற்ற பஞ்ச ஸமஸ்காரம், மந்த்ர உபதேசம், भर ஸமர்ப்பணம் முதலியவைகளை நமக்கருளி, நம் தீர்க்க பந்துவாய் இருந்து, கடைசீ வரையிலும் நம்மை புறம்போகவிடாமல் காப்பாற்றி, நம்மை வைகுண்டத்தேற்றி, அங்கும் நமக்கு தக்க பகவத் கைங்கர்யங்களை நியமித்து நம் ஆனந்தத்தை பரிபூர்ணமாக்கி, நம்முடன் ஆனந்தப்படும் ஆசார்யனுக்கு, நாம் அவர் இட்ட வழக்காயும், அவருக்கு உகந்த பணியையுமே, "अप्रत्युपकरणधिया देववत् स्यात् उपास्य:" என்னுமாப்போலே செய்து உஜ்ஜீவிப்போமாக.

श्रीमन्नूत्नरङ्गनाथयतिराडाप्तात्मविद्यालयं श्रीमन्नूत्नलक्ष्मणार्ययतिराट् संप्राप्ततुर्याश्रमम् ।
श्रीवासेन्द्रकटाक्षसंततसुधालक्ष्यात्मयोगाञ्चितं श्रीमन्नूत्नवागधीशयमिनं भक्त्याऽश्रयामो गुरूम् ।।

नव्यवागीशयोगीन्द्रं हयास्यपदसेविनं। ब्रह्मतन्त्रस्वतन्त्रार्यं भजामस्वात्मसंपदम् ।।

தாஸன்
மாகரல் கிடாம்பி அச்சுதராமன்.

॥ श्रीः॥

॥ श्रीलक्ष्मीहयवदन लक्ष्मीनारायण वेणुगोपाल परब्रह्मणे नमः॥

॥ श्री शठकोप रामानुज देशिकेभ्यो नमः॥

॥ श्री ब्रह्मतन्त्र स्वतन्त्र परकाल गुरुपरम्परायै नमः॥

# அடியேன் அநுபவிக்கும் “ஸம்ப்ரதாய ப்ரதீபம்”

---

### श्रीमते रङ्गरामानुजमहादेशिकाय नमः

ஸ்ரீமத் ப்ரஹ்மதந்தரஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி மடாஸ்தானம் எனும் சீரிய சிங்காசனத்தில் வீற்றிருந்து ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவனின் ஸமாராதனத்தையும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ரக்ஷணத்தையும் அநுக்ரஹித்துக்கொண்டு எண்ணற்ற சிஷ்ய வர்கங்களின் ஹ்ருதயத்தில் நித்யவாஸம் செய்தருளும் ப்ரக்ருதம் ஸ்ரீமத் பரகால ஸ்வாமி, வாத்ஸல்யம் மிகுந்த அநுக்ரஹம் எனும் மழையை பொழியும் வள்ளல். ஸ்ரீ ஸ்வாமியின் கடாக்ஷத்தை ஒரு முறையேனும் பெற்றவர்க்கு இது நன்கு விளங்கும்.

ஸ்ரீமதபினவ ராமானுஜ பரகால ஸ்வாமியின் சதமான உத்ஸவத்தில் சீலமில்லா சிறியேனான அடியேனையும் திருத்தி சிறு கைங்கர்யங்களில் பணி கொண்டு, பின்னர் பல ஸந்தர்பங்களில் அடியேனுக்கு பலபடியாய் வேதாந்த-ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தும், ஆசார்ய பரம்பரையின் விசேஷங்களை பலகாலும் விவரித்தும், குறிப்பாக அடியேனின் ப்ராசார்யரான ஸ்ரீமத் திருக்குடந்தையாண்டவன் ஸந்நிதியிலும், அடியேனின் ஆசார்யரான ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஸந்நிதியில் தாம் அநுபவித்த பல அரிய விஷயங்களை அநுக்ரஹித்தும், நீசனும் நிறையொன்றும் இல்லாதவனுமான அடியேன் பக்கலில் விசேஷமாக க்ருபையை பொழிந்து, அடியேனை சிறு சிறு கைங்கர்யங்களில் ஈடுபடுத்தி அநுக்ரஹித்துவரும் கருணை கடலான நம் ஸ்வாமியின் ஸதாபிஷேக மஹோத்ஸத்தில், “போற்றியுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும்” என்றபடி, वाङ्मनसागोचरமான பெருமைகளும் கல்யாணகுணங்களும் கொண்டவரான ஸ்ரீ ஸ்வாமியின் ஸந்நிதியில் எல்லோரும் நித்யம் அநுஸந்தித்துவரும் குணங்களையும், அடியேனுக்கு ப்ரத்யேகமாக ஏற்பட்ட அநுபவங்களையும் “अखिल जगत्स्वामिन् ! अस्मत्स्वामिन् !” என்ற க்ரமத்திலே பகிர்ந்து கொள்ள விழைந்து, இந்த ஸாஹஸத்தை தலை கட்டித் தர பாதுகா தேவியை ப்ரார்த்தித்துத் தொடர்கிறேன்.

**<u>अखिल जगत्स्वामिन् !</u>**

"अधिजिगमिषुराद्यं धाम दिव्यं त्रिधाम्नः

श्रुति विविध परीक्षाशोधिते क्वापि पात्रे।

अनघ-गुण-दशायां आहितस्नेहमार्यः

प्रदिशति निरपायं संप्रदाय-प्रदीपम्॥" - என்று ஸ்வாமி தேசிகன் श्रीमद्रहस्यत्रयसारத்தில் आचार्यकृत्यமாக அருளியுள்ளார். தன் தூப்புல் பிள்ளையின் இவ்வாசார்ய லக்ஷணத்தை நடத்திக்காட்டுகைக்காக அந்த தீபப்ரகாஸப்பெருமாளே திருவுள்ளம் பற்றி, ஸ்வாமி தேசிகன் ஸ்தாபித்த ஆஸ்தான மடத்தை அலங்கரிப்பதற்காக संप्रदाय-प्रदीपமாக தன் திரு அவதார தினமான சித்திரை ரேவதியில் நம் ஸ்வாமியை அவதரிப்பித்தான் போலும். **"देवमिव आचार्य उपासीत"** என்று ப்ரமாணம் காட்டிய நெறியிலே, **ஸ்ரீதீபப்ரகாசன் விஷய ஸ்தோத்ரமான ஸ்ரீ சரணாகதி தீபிகையில், ஸ்வாமி தேசிகன் விளக்கொளி எம்பெருமானிடம் அநுபவித்த அநேக கல்யாணகுணங்களும், ஸ்வாமி ப்ரயோகப்படுத்திய பதங்களும், நம் ஸ்வாமியிடமும் அந்வயிக்கும் படியுள்ளதை அனைவரும் காணலாம்**. அதில் அடியேன் அநுபவித்த சிலவற்றை இங்கே விவரிக்கிறேன்.

இந்த "சரணாகதி தீபிகை" ஸ்தோத்ரத்தில் ஒரு விசேஷம். ஆழ்வார்கள் எம்பெருமானையும் பிராட்டியையும் சேர்த்து மங்களாசாஸனம் செய்த திவ்யதேசங்கள் சிலதே. அதில் தூப்புல் திவ்யதேசமும் ஒன்று. இதை உணர்த்தும் வகையில் ஸ்வாமி தேசிகன் இந்த ஸ்தோத்ரத்தை **पद्मापते स्तुतिपदेन** என்று தொடக்கச் சொற்தொடராக ப்ரயோகித்தருளினார்.

நம் ஸ்வாமியும் பிராட்டியின் விசேஷங்களையும், பெருமைகளையும், சரணாகதியையும் நிலைநாட்டும் விதமாக, வேதத்திலிருந்தும், பாஞ்சராத்ராகமங்களிலிருந்தும், இதிஹாசபுராணங்களிலிருந்தும், ஆழ்வார் பாசுரங்கள், ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரரர் மற்றும் ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகளிலிருந்தும் பல அரிய ப்ரமாணங்களையும் கொண்டு தன் காலக்ஷேபங்களிலும், இதர ஸந்தர்பங்களிலும் இந்நிர்ணயத்தை ஸமர்த்தனம் செய்து அநுக்ரஹித்தாகும். லக்ஷ்மீதந்த்ரம் முதலிய பல ஆகம க்ரந்தங்களை நம் ஸ்வாமி கண்டஸ்தமாக அறிவதை பல ஸந்தர்பங்களில் கண்டு வருகிறோம்.

தம் ஸம்ப்ரதாயத்தை ***"मान्यम् यतीश्वर महानस संप्रदायम्"*** என்று ஸ்வாமி தேசிகன் புகழ்கிறார். ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரருக்கு மாதூகர கைங்கர்யம் செய்த கிடாம்பியாச்சான் வழியாக வந்த ஸம்ப்ரதாயமாக ஸ்வாமி அநுபவிக்கிறார். இவ்வந்வயம் நம் ஸ்வாமிக்கும் பொருந்தும். தம் சிறு ப்ராயம் முதலே, श्रीभाष्यकारसदृशராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதபினவ ரங்கநாத ப்ரம்ஹதந்த்ர ஸ்வாமியிடம், गीताचार्यன் அருளிய 'तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया' என்ற க்ரமப்படி, अत्यन्त अन्तरङ्ग कैङ्कर्यங்கள் செய்து நம் ஸ்வாமி அநுஷ்டான-வேதாந்த-ரஹஸ்ய க்ரந்தங்களை அதிகரித்தார். தாம் ஸ்ரீமதபினவ ரங்கநாதஸ்வாமியிடம் காலக்ஷேபத்தின் போது கேட்ட

விசேஷார்த்தங்களை **पुनरवलोकनं** இன்றியே மூலத்துடன் சேர்த்துச் சொல்லும் அஸாத்யமேதையை கொண்டவராக இருந்தார். இன்றும், அந்தரங்கத்தில் சிஷ்யர்களுக்கு ரஹஸ்யார்த்த-வேதாந்த ஸம்சயங்களுக்கு சமாதானம் அருளும்போது ஸ்ரீமதபினவ ரங்கநாதஸ்வாமி **प्रयोगि**த்த அதே **पद**ங்களைக் கொண்டு, ஸ்வாமியின் திருவாக்காக ஸமாதானம் அருளுவதை நாம் கண்டு வருகிறோம். **"யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே"** என்று ஸ்வாமி தேசிகன் போல் நம் ஸ்வாமியின் அநுஸந்தானமும்.

மூன்றாம் ச்லோகத்தில், **प्रातः स्मरणीय**ரான நம் ஸ்வாமி நமக்கெல்லாம் ஸ்தவ்யராய் இருப்பதை **"स्तव्यं"** என்ற பதமும், சிஷ்யர்கள் சிரகாலமும் இதை அநுஸந்தித்துவருவதை குறிப்பிடுவதுபோல் **"भवन्तुं स्तोतुं अभिलष्यति"** எனற சொற்றொடரும் அமைந்திருக்கின்றன.

நான்காம் மற்றும் ஐந்தாம் ஸ்லோகங்களில், தீபப்ரகாஸனின் திவ்யமங்கள விக்ரஹத்தை வர்ணிக்கும் பதங்கள் நம் ஸ்வாமிக்கும் அந்வயிக்கும். இந்த திருநக்ஷத்திரத்திலும் நம் ஸ்வாமியின் திருமேனி அவரின் தபஸ்ஸுக்கும், அநுஷ்டானத்திற்கும் அநுகூலமாக அஸக்தியின்று விளங்கிவருவதை நாம் கண்டு வருகிறோம். இப்படிப்பட்ட தபஸ்ஸினாலும், ஹயக்ரீவாராதனத்தின் சக்தியினாலும், ஏற்கனவே ஏற்பட்டிருந்த மந்திரஸித்தியினாலும் தேஜஸ் பொருந்தியதாக இருக்கும் நம் ஸ்வாமியின் திருமேனியை ஸ்மரிப்போம் - **"ते वपुः दीप समावभासम् आहुः"** (தேவரீரின் திருமேனி தீபத்தை போல் ஒளிர்ந்து விளங்குவதாய் பெரியோர்கள் கூறுகின்றனர்).

இத்திருமேனியை மேலும் வர்ணிக்கும் விதமாக **"स्वामिन् गभीरसुभगं श्रमहारि पुंसां माधुर्य रम्यं अनघं मणिभङ्गदृश्यम्।"**, என அமைந்த பதங்கள் நம் ஸ்வாமிக்கும் பொருத்தமானதே. நம் ஸ்வாமியின் திருமேனி மிகவும் **க(ம்)பீரமானது** – ஆழமானது – ஸ்வாமியின் தபஸ்ஸினாலே. **उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्त**ராயும் **त्रिदण्ड हस्त**ராயும் நம் ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தை ஸேவித்தால் இந்த கம்பீரம் நன்கு விளங்கும். இருப்பினும் சிஷ்யர்களான நமக்கெல்லாம் மிகவும் **ஸுலப**மானவராய், தம்முடைய கடினமான கார்யக்ரமங்களின் நடுவிலும் சிஷ்யர்களுக்கு அநுக்ரஹிப்பதற்காக தனியாக **शरणागतसार्थवाह**ராய் நம் ஸ்வாமி ஸமயம் ஒதுக்குவதால். சிஷ்யர்களின் குறைகளைக் கேட்டும், அவர்களுக்கு ஹிதோபதேசங்கள் செய்தும் நம் ஸ்வாமி **श्रमहारि पुंस**மாக திகழ்கிறார். அதிகாரிகளுக்கேற்ப உபதேசங்களைப் பண்ணியும், சிஷ்யர்களின் இஹ-பர சுகங்களுக்காக அநுக்ரஹித்தும் **माधुर्य रम्य**ராக நம் ஸ்வாமி விளங்குகிறார். ஆத்மகுண பூர்த்தியுடனும், குற்றமற்ற ஸம்ப்ரதாயத்தில் சிக்ஷிக்கப்பட்டு சுத்தாசாரமுடையவராதலால் **अनघ**ராகிறார். ஸம்ஸாரதாபாக்னியில் தஹிக்கப்பட்டு தள்ளாடும் சிஷ்யர்களுக்கு தம் ஸேவையினால் குளிர்ச்சியையருள்வதால் **मणिभङ्गदृश्य**ராகிறார். இப்படி **"प्रकृष्ट**

**बहुपातक प्रशमहेतु**"வான ஸேதுவைப் போல் விளங்கும் நம் ஸ்வாமி , நமக்கெல்லாம் பகவான் எனும் தீர்த்தத்தில் நாமெல்லாம் இறங்கி அநுபவிக்க படித்துறையாகவும் இருக்கிறார்.

எட்டாம் ஸ்லோகத்தில் தீபப்ரகாஸனின் குணங்களை விவரிக்கும்போது ப்ரதானமான ஷாட்குண்யத்தை ஸ்வாமி தேசிகன் அநுஸந்திக்கிறார். இவையும் நம் ஸ்வாமிக்கு பொருத்தமாக அமையப்பெறுவதை நாம் காண்கிறோம். நம் ஸ்வாமியின் ஸத்ஸம்ப்ரதாய ஸதாசார்ய கடாக்ஷத்தினால் ஸம்பாதிக்கபெற்ற ஜ்ஞானத்தை யாவரும் அறிவோம். தவிர, பல ஸமயங்களில் நாம் கூறாமலேயே நம் மனஸ்ஸில் ஓடுக்கொண்டிருக்கும் எண்ணங்களை நம் ஸ்வாமி அறிந்து, அதற்கு பதில் கூறுவதைப் பார்த்து வருகிறோம். सर्वज्ञः सर्ववित् போன்ற எம்பெருமானைக்கூறும் உபநிஷத்வாக்யங்களுக்கு இலக்காய் நம் ஸ்வாமி விளங்குகிறார். இப்படி நம் ஸ்வாமியின் **ஜ்ஞானம்** நன்கு ப்ரகாசிக்கிறது. ஸம்ப்ரதாயத்தை காக்கும் பெரிய ஆஸ்த்தானத்தை நிர்வஹிப்பதும், ராஜகுருவாகவும், ஆசார்யராகவும் எண்ணற்ற சிஷ்யவர்கங்களை பரிபாலிப்பதும், அதற்கான ஸஞ்சாரங்களிலும் தம் ஆசாரானுஷ்டானங்களை சிறிதும் விடாது இவற்றை நடத்தி வருவதிலிருந்தும் நம் ஸ்வாமியின் **ப௫ம்** புலப்படுகிறது. ஹயக்ரீவ ஸமாராதனம், பூர்வாசார்ய ப்ருந்தாவனங்கள் மற்றும் மடத்தை சேர்த்த ஸந்நிதிகளில் நித்யதிருவாராதனம், இவற்றை பராமரித்து வரும் கைங்கர்யபரர்கள் முதலியன அடங்கிய பெரிய மடத்தை ஒரு குறைவின்றி நிர்வஹிப்பதிலிருந்தும், சிஷ்யர்களை தம் தர்மங்களில் ஈடுபடுத்தியும், அவர்களை சரியான மார்கத்தில் வழிநடத்தி வருவதிலிருந்தும் நம் ஸ்வாமியின் **அடக்கியாளும் வல்லமையை (नियमनक्षमता)** நாம் அறிகிறோம். எப்படிப்பட்ட காலத்திலும் பூர்வாசார்ய பத்ததியிலிருந்து சிறிதளவும் வழுவாது, ஸம்ப்ரதாயமாக அதே க்ரமத்தில் இவையனைத்தையும் நடத்தி வரும் **வீர்யத்தை** கொண்டவர் என்பதை நாம் இன்றும் பார்த்து வருகிறோம். இத்தனை திருநக்ஷத்திரத்திலும் நம் ஸ்வாமி ஸ்ரீஸந்நிதியிலும் ப்ருந்தாவனங்களிலும் தினமும் அநந்த தண்டவத் ப்ரணாமங்களை செய்வதும், தம் திருமேனியில் நோவு சாற்றிக்கொண்டிருக்கும்போதும் இந்த பத்ததியில் சிறிதளவும் வித்தியாசம் இன்றி கார்யக்ரமங்களை அநுஷ்டித்து வருவதும் ஸ்வாமியின் வீர்யத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கலியின் கலப்பு எதிலும் நேராதபடி இவ்வனைத்து கைங்கர்யங்களையும் நடத்தி சிஷ்யர்களை ரக்ஷிப்பதிலிருந்து ஸ்வாமியின் **சக்தி** விளங்குகிறது. ஸ்ரீஹயக்ரீவஸமாராதனத்திற்கோ, மடத்தின் இதர நிர்வாஹங்களிற்கோ எவரிடமும் எதையும் எதிர்பாராமல் இவைகளை நடத்திவரும் ஸ்வாமியின் **தேஜஸ்ஸை** நன்கு அநுபவித்துவருகிறோம். இவை உட்பட இன்னும் எண்ணற்ற நற்குணங்களுக்கு இருப்பிடமாக நம் ஸ்வாமியிருப்பதை அநுஸந்திக்கும்படியான சரணாகதி தீபிகையின் எட்டாவது ஸ்லோகம் **– "ज्ञानं बलं नियमनक्षमता अथ वीर्यं शक्तिश्च तेज इति ते गुणषद्कम्। सर्वातिशायिनि यस्मिन् अन्तर्गतो जगदिव त्वयि सद्गुणौघ।"**

இப்படிப்பட்ட நம் ஸ்வாமியிடம் முமுக்ஷுக்கள், சிஷ்யர்களாக சரணாகதி செய்து வருகிறார்கள் என்பதை அநுஸந்திக்கும் விதமாக அமைந்த ஒன்பதாம் ஸ்லோகத்தின் शब्दराशि - **त्वां शिष्यिता मुमुक्षवः शरणयन्ति!**

இத்தீபிகையின் பதினோறாம் ஸ்லோகத்தில், எம்பெருமான் எப்படி சேதனாசேதனங்களை பலவகைகளில் ஈடுபடுத்தி மகிழ்கிறார் என்பதை வர்ணிக்கும் அமைப்பு நம் ஸ்வாமிக்கும் பொருந்தும். நம் மடத்தில் எந்தெந்த பதார்த்தங்களைக் கொண்டு எப்படி கைங்கர்யங்கள் செய்ய வேண்டும் என்பதை நிர்ணயித்தும், சிஷ்யர்களின் ஸ்வரூபத்திற்கேற்ற கைங்கர்யங்களை **विभजि**த்து கொடுத்தும், நடத்தியும் வரும் பாங்கை நாம் பார்க்கின்றோம். **ज्ञानचिकीर्षா**ர்க்கு **कालक्षेपमुखेन**ஞானத்தையும், **कैङ्कर्यचिकीर्ष**ர்க்கு ஸவ்ரூபத்திற்கேற்ப சேவகங்களையும் **दिव्यदेशानुभवप्रिय**ர்க்கு **शक्त्यानुसार**மாக கைங்கர்யங்களையும் வழங்கி அவர்களை அநுக்ரஹித்து மகிழ்விக்கும் **पाञ्चालिका शुक विभूषण भोगदायी**யாக நம் ஸ்வாமி விளங்கி வருகிறார்.

பன்னிரண்டாம் ஸ்லோகத்தில், தீபப்ரகாஸனிடம் பக்தர்கள் எவ்வாறெல்லாம் உறவு கொண்டாடி மகிழ்கின்றனர் என்ற ரீதி, நம் ஸ்வாமியிடம் நாமும் அனுபவிக்கலாம்படியாக உள்ளது. **त्वां मातरं** - தாயைப் போன்று நம் ஸ்வாமி வாத்ஸல்யத்தை வர்ஷிப்பதாலும், **'அன்று நான் பிறந்திலேன்'** என்று திருமழிசை ஆழ்வார் சாதித்தபடியும், **पुत्रस्य भूयांसि कर्मण्यारभते** என்ற படியும் பஞ்சஸம்ஸ்காரத்தின் மூலம் சிஷ்யர்களை ஸ்ரீவைஷ்ணவனாக பிறப்பிப்பதாலும். **त्वां पितरं** தந்தையைப் போன்று உபதேசம் செய்து திருத்துதலால். **त्वां सहजं** உடன்பிறந்தாரைப்போன்று உடனிருந்து வழிநடத்துவதால். **त्वां निवासं** நிவாஸஸ்த்தானமாக-புகலிடமாக இருப்பதால். **त्वां सुहृदं** - பரம ஸுஹ்ருத்தாக ஹிதோபதேசமும் , உபாயானுஷ்டானமும் செய்துவைப்பதால். **त्वां गतिं** - இதனால் கதியாகவும் (ப்ராப்யராக) ஆவதால். **त्वां निस्सीम नित्य निरवद्य सुखप्रकाशं** – இப்படி உபாயானுஷ்டானம் செய்விக்கப்பெற்றவர்க்கு மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை வழங்கியும், தாம் இவற்றுடன் எப்போதும் இருப்பதால். **त्वां सन्तः समेत्य विशन्ति**– இப்படிப்பட்ட தேவரீரை பெரியோர்களும், அடியோங்களும் அடைந்து இன்புறுகிறோம்.

இந்த மஹிமைகளை உடைய நம் ஸ்வாமியின் ஒர் கடாக்ஷமே ஒருவனை முமுக்ஷுவாக்கி மோக்ஷஸாம்ராஜ்யம் வரை கொண்டு செல்லும் என்பதை உணர்த்தும் விதமாக பதிமூன்றாம் ஸ்லோகம் அமைகிறது - **त्वदवेक्षितानां सत्त्वं विमुक्ति नियतं भवति।**

**कर्मस्वनादि** எனத் தொடங்கும் பதிநான்காம் ஸ்லோகத்தில், பக்ஷபாதமின்றி விளக்கொளி பெருமாள் அருள்வதை விவரிக்கும் **पङ्क्ति**கள் நம் ஸ்வாமியிடமும் அந்வயிக்கும். நம் ஸ்வாமி தம் சிஷ்யர்களிடமும் அபிமானிகளிடமும் எந்த அபேக்ஷையோ, ஏற்றத்தாழ்வோவின்றி அனைவரையும் ஸமமாக அநுக்ரஹித்து வருவது யாவரும் அறிந்ததே - **कर्मस्वनादि विषमेषु समोदयालु**வாக நம் ஸ்வாமி திகழ்கிறார். **स्वप्राप्तये तनुभृतां त्वरसे** –தம்மையும் ஸ்ரீஹயக்ரீவனையும் ஸேவிக்க வர இயலாத பக்தர்களை அநுக்ரஹிப்பதற்காக தாமே த்வரையுடன் ஸஞ்சாரங்கள் செய்து, **यद्विन्यासमिषेण पत्रमकरीमुद्रां समुद्राम्बरा** என ஸ்ரீபாஷ்யகாரரைப் போல் லோகத்தையும்

சிஷ்யர்களையும் உஜ்ஜீவிக்க பண்ணுகிறார். **स्वाभाविकं तव सुहृत्त्वं इदं गृणन्ति –** இதை செய்வதற்கென ப்ரதிபலன் ஏதும் எதிர்பாராதவராயும் (ப்ரதிபலன் ஏதும் பிறரால் தர இயலாதும் கூட), இயல்பாகவே சிஷ்யர்களிடத்தில் கொண்ட வாத்ஸல்யத்துடனும் இருப்பதை நாம் காண்கிறோம்.

தீபப்ரகாஸனின் சௌலப்யத்தை விவரிக்கும் **निम्नोन्नतानि** எனத் தொடங்கும் பதினெட்டாம் ஸ்லோகம் நம் ஸ்வாமிக்கும் பொருந்தும். **निम्नोन्नतानि निखिलानि पदानि गाढं मज्जन्ति ते महिमसागरशीकरेषु –** நம் ஸ்வாமியின் பெருமைகள் பல- தாம் வஹிக்கும் அஸாதாரணமான ஆஸ்த்தானத்தின் பெருமை, எம்பெருமானார், ஸ்வாமி தேசிகன் போன்ற மஹாபுருஷர்கள் ஆராதித்த ஸ்ரீஹயக்ரீவனுக்கு ஆராதனை செய்யும் பெருமை, ஒப்பற்ற ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஆசார்யனாக திகழ்வது என எத்தனையோ!!! இத்தனை பரத்வமும் மேன்மையும் கொண்ட நம் ஸ்வாமி, தம் பரமஸௌசீல்யத்தால் மிகவும் தாழ்ந்த அடியேன் உட்பட எல்லா பாமர மக்களிடமும் கலந்து பரிமாறும் விதத்தை அநுஸந்திப்பதை வர்ணிக்கும் பதங்கள் **- शीलेन नीचजनान् नीरन्ध्रमाश्रयसि!**

இதற்கடுத்த ஸ்லோகமான இருபதாம் ஸ்லோகத்தில், ஸகல வித மேன்மையும் பொருந்திய எம்பெருமான் தன்னை அண்ட அஞ்சி நிற்கும் சேதனர்களை வழிநடத்த தானே ஆசார்ய வடிவு கொண்டு, அவர்களுக்கு உபதேசம் செய்து நல்லறிவு தந்து, தன்னை பின்தொடர வைப்பதாக ஸ்வாமி தேசிகன் நம் ஸம்ப்ரதாய அர்த்தத்தை அருள்கிறார்.

**क्वासौ विभुः क्व वयम् इत्युपसत्तिभीतान्**
**जन्तून् क्षणात् त्वदनुवृत्तिषु योग्ययन्ती।**
**सम्प्राप्त सद्गुरुस्तनोः समये दयालोः**
**आत्मावधिर्भवति संस्कृत धीः क्षणं ते॥**

இப்படி ஸ்வாமி தேசிகனால் மங்களாஸாஸனம் செய்யப்பட்ட தீபப்ரகாஸ எம்பெருமானே நம் ஸ்வாமியின் உருவத்தில் நம்மை அநுக்ரஹிக்க எழுந்தருளியிருப்பதால், இவரின் பெருமைகள் அனைத்தையும் நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. கடலை கையிட்டுக் காட்டுமாப்போலே சிறியஜ்ஞானத்தனான அடியேன், நாம் அனைவரும் அநுபவித்து வரும் ஒரு சில விசேஷங்களை பகிர்ந்து கொண்டேன். **"அஞ்சிறைய மடநாராய்"** பதிகத்தில் **"ஆழி மட நெஞ்சு"** என ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய லக்ஷணப்படி நம் ஸ்வாமி **अन्तरङ्गोक्तियोग्यர்**. ஸ்வாமியிடம் நெருங்கி வர்த்திக்கும் பாக்யத்தை பெற்றவர்கள் இன்னும் பலவற்றை அநுபவித்திருப்பார்கள்.

**<u>अस्मत्स्वामिயாக அநுபவித்தவை</u>**

இனி, அடியேன் **"अस्मत्स्वामिन्!"** என்று அடியேனை ப்ரத்யேகமாக ஸ்வாமியின் கடாக்ஷம் திருத்தி பணி கொண்ட சில ஸம்பவங்களின் விவரணங்களை பகிர்ந்து கொள்கிறேன்.

**<u>திருக்குடந்தையாண்டவன் பற்றிய அநுபவங்கள்:</u>**

**"स चाचार्यवंशोज्ञेयोऽसावसाविति आभगवत्तः"** என்று சிஷ்யக்ருத்யமாக ச்ருதி விதிக்கிறது. ஒரு நாள் அடியேன் ஸ்வாமியை தண்டனிட சென்றபோது ஸ்வாமி க்ருபையுடன் "நீ திருக்குடந்தை ஆண்டவனை ஸேவித்திருக்கிறாயா?" என கேட்டாயிற்று. அடியேனுக்கு அந்த பாக்யம் கிட்டியிருக்கவில்லை, ஸ்வாமியை பற்றி கேட்கும்போதெல்லாம் அவரை ஸேவிக்கும் பாக்யம் பெற்றிருக்கவில்லையே என்ற ஏக்கம் இருக்கும். இதை விஜ்ஞாபித்தவுடன் நம் ஸ்வாமி திருக்குடந்தை ஆண்டவனின் ப்ரபாவத்தை பற்றியும், தமக்கு பூர்வாச்ரமத்தில் திருக்குடந்தை ஆண்டவனிடம் ஏற்பட்ட அநுபவங்களையும் அநுக்ரஹித்து விவரித்து, இவையாவற்றையும் எப்படி அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணமாண்டவன் நடத்தி வருகிறார் என விளக்கி அருளினார். அடியேன் எப்போது ஸ்வாமியை ஸேவிக்க சென்றாலும் "ஆச்ரமம் சென்றிருந்தாயா? ஸ்ரீமதாண்டவனை ஸேவித்தாயா? எப்படி எழுந்தருளியிருக்கிறார்?" என பரம ஸௌஹார்த்தத்துடன் ப்ரஸ்னம் பண்ணியாகும்.

ஒரு நாள் அடியேனின் "வேதாந்த தீபம்" காலக்ஷேபம் பற்றி விசாரித்து, "'காலக்ஷேபத்திற்கு முன் க்ரந்தத்தை பார்க்காதவன் ஆசார்யன் இல்லை. காலக்ஷேபத்திற்கு பின் க்ரந்தத்தை பார்க்காதவன் சிஷ்யனாக மாட்டான்' என்று திருக்குடந்தையாண்டவன் ஸாதித்தாகும். காலக்ஷேபத்தில் ஸ்ரீ.உ.வே.நாவல்பாக்கம் சடகோப ராமானுஜாசார்ய ஸ்வாமி ஸாதித்தவற்றை உடனேயே அடிக்கடி ஸேவித்துக் கொண்டிரு" என அநுக்ரஹித்தாயிற்று.

**<u>ஸத்யாகாலத்தில் ஆனந்தமயம்:</u>**

பின் ஒருநாள் ஸத்யாகாலத்தில், ஸ்வாமி தேசிகனின் அவப்ருதஸ்நான தினத்தின் முந்தைய இரவு, ஸ்வாமியின் நியமனப்படி காலக்ஷேபத்தில் முன் தினம் அதிகரித்த ஆனந்தமயாதிகரணத்தை அடியோங்கள் வாசித்துகொண்டிருந்த போது ஸ்வாமி அடியோங்களை நியமித்து, "என்ன ஸேவித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என வினவி, ஆனந்தமயாதிகரண விஷயவாக்யங்களை விஸ்தாரமாக விளக்கியருளி, "இவற்றையெல்லாம் "அதிகரணஸாராவளி"யுடன் ஸேவித்தால் இன்னும் ஆனந்தமாயிருக்கும்" என அநுக்ரஹித்தார். ஸ்வாமியின் இவ்வனுக்ரஹத்தால் பின்னர் ஸ்ரீ.உ.வே.நாவல்பாக்கம் சடகோப ராமானுஜாசார்ய ஸ்வாமியிடம் ஸ்ரீஅதிகரணஸாராவளியை உபதேஸமாகவும், ஸங்க்ரஹார்த்தத்துடனும் அநுக்ரஹிக்கப் பெற்றோம்.

**<u>அதிகரணஸாராவளியில் ஆழ்ந்த விருப்பம்:</u>**

பெங்களூரு மடத்தில் பின்னர் ஸ்வாமி எழுந்தருளியிருந்த போது ஸ்ரீஹயக்ரீவன் ஸந்நிதியில் ஸ்ரீஅதிகரணஸாராவளியை பாராயணம் செய்து கொண்டிருந்தேன். பின்னர் குடீரத்தில் ஸேவிக்கும்போது இதை பற்றி வினவி, நம் ஸ்வாமி அதிகரணஸாராவளி ஸ்ரீகோசத்திலிருந்து பல ஸ்லோகங்களைச் சேவித்து, பத-பத அர்த்தங்களுடன் அருளினார். **"எவ்வளவு श्राव्यமாக இருக்கிறது!! ஸ்ரீபாஷ்யத்தில் கூறாத பல அபூர்வார்த்தங்களை இப்படி श्लोकरूपமாக அருளிச்செய்ய ஸ்வாமி தேசிகன் தவிர வேறு ஒருவரால் முடியுமா? सर्वतन्त्रस्वतन्त्रரான அவருக்கு நிகர் அவரே"** என மிகுந்த பூரிப்புடன் கூறி மகிழ்ந்தாயிற்று.

__தாத்பர்ய சந்த்ரிகையின் தாத்பர்யங்கள்:__

வேறோர் ஸமயம் நம் ஸ்வாமி பெங்களூரில் எழுந்தருளியிருந்த போது ஓரிரவு சாற்றுமறைக்கு பின் ததீயாராதனம் முடிந்தவுடன் ஸேவிக்கச் சென்றேன். ஆஹாரம் ஆன உடனேயே அடியேன் ஸேவித்தத்தை பார்த்து அருகில் ஸ்ரீ நந்து ஸ்வாமி "வயிறு நிரம்ப சாப்பிடவில்லையா?" என ஹாஸ்யமாக அடியேனை ப்ரச்னம் பண்ண, இதை கேட்ட நம் ஸ்வாமி உடனேயே–

**"उदरस्यार्धमन्नस्य तृतीयमुदकस्यतु।**

**वायोः सञ्चारणार्थं तु चतुर्थमवशेषयेत्॥" என்ற ப்ரமாணத்தை ஸ்வாமி தேசிகன் காட்டுகிறார், எப்படி உணவருந்தவேண்டும் என்று. வயிற்றில் பாதி நிரம்பும் அளவே அன்னம் புஜிக்க வேண்டும், மூன்றாம் கால் பாகம் ஜலம் பருக வேண்டும், நான்காம் கால் பாகம் வாயு ஸஞ்சாரத்திற்காக வெறுமனே இருக்கவேண்டும்.**" என்று அருளி, ஸ்ரீமத்கீதாபாஷ்யம்-ஸ்ரீதாத்பர்ய சந்த்ரிகை பங்க்திகளை கண்டஸ்த்தமாக பூர்த்தியாக கூறி, முன்பின் ப்ரகரணங்களை விளக்கி அநுக்ரஹித்தார்.

இது போன்றே ஜபத்தின் போது ஆஸனம் எப்படி இருக்க வேண்டும் என சிஷ்யர் ஒருவர் கேட்டபோதும், ஸ்ரீகீதாபாஷ்யம் மற்றும் ஸ்ரீதாத்பர்ய சந்த்ரிகையில் ஸாதித்த ப்ரமாண வசனங்களை கூறி ஆஸனம் இருக்க வேண்டிய ப்ரகாரத்தை விரிவாக உபதேசித்து அநுக்ரஹித்தார்.

__ஆழ்வார் ஸ்ரீஸூக்தி அநுபவங்கள்:__

நம் ஸ்வாமியின் நாலாயிர திவ்யப்ரபந்த ப்ராவண்யமும், அதற்கு கரையும் ஸ்வபாவமும் யாவரும் அறிந்ததே. இதில் அடியேன் விசேஷமாக அநுபவித்த ஒரு சிலவற்றை பகிர்ந்து கொள்கிறேன். ஓர் தனுர்மாதத்தில் அடியேன் ஸ்வாமியை ஸேவிக்கச் சென்றிருந்தேன். அப்போது ஒரு ப்ரஸ்தாபத்தில் நம் ஸ்வாமி ஸாதித்தாயிற்று "நாலாயிரமும் தெரிந்தால் தான் திருப்பாவைக்கு அர்த்தம் சொல்ல முடியும்.

'பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டுசித்தன்

துய்யகுலசேகரன் நம் பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடுஞ்
செய்ய தமிழ் மாலைகளுந்தெளியவோதி
தெளியாத மறைநிலங்கள் நாம் தெளிகின்றோமே' என்று ஸ்வாமி தேசிகன்

கூறுகிறார். **இதில் தெளியாத மறைநிலங்கள் என்பது நாச்சியார் பாடிய ப்ரபந்தங்கள், குறிப்பாக வேதமனைத்துக்கும் வித்தாகும் திருப்பாவை.** பொய்கையாழ்வார் முதல் கலியன் பாடிய பாசுரங்களை கொண்டு அநுபவித்தால் மட்டுமே திருப்பாவையில் கோதையின் திருவுள்ளம் தெரியவரும். பெரியோர்கள் இப்படியே பணித்திருகிறார்கள்" என தம் மதுர வாக்கால் ஸாதித்தாயிற்று.

மற்றொரு சமயம் வேறொரு ஸந்தர்ப்பத்தில் நாலாயிரத்தில் எங்கெங்கெல்லாம் மதுஸூதனன் எனும் ஸ்ரீஹயக்ரீவனின் திருநாமங்கள் வரும் பாசுரங்களை ப்ரவாஹம் போல் பட்டியலிட்டாயிற்று.

<u>பூர்வாசார்ய க்ரந்தங்களை ப்ரகாசப்படுத்துவது:</u>

நம் ஸ்வாமிக்கு பூர்வாசார்ய க்ரந்தங்களில் இருக்கும் ருசியும், ப்ராவண்யமும் நாம் அறிந்ததே. பல ஸந்தர்பங்களில் சிஷ்யர்களுக்கு பூர்வர்கள் ஸாதித்த பல அரிய விஷயங்களை அநுக்ரஹித்து கொண்டிருக்கிறார். இதில் அடியேனின் சில அநுபவங்கள்:

**<u>ஸ்ரீமஹாபரகால ஸ்வாமி அருளிய 18000 படி தத்த்வார்த்த ப்ரகாசிகை</u>** எனும் வ்யாக்யான க்ரந்தத்தை தெலுங்கு லிபியிலிருந்து தமிழில் ப்ரசுரிக்கும்போது, த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் ஸ்வாமி பாஷாகீதியை பற்றி கூறியுள்ள ஸ்லோகத்திற்கும், ஸ்ரீமத் பெரியபரகால ஸ்வாமி மேற்கோள் காட்டிய புராணவசநங்களையும் விளக்கி அநுக்ரஹித்தாயிற்று.

**<u>ஸ்ரீஸ்ரீநிவாஸபரகால ஸ்வாமியின் லக்ஷ்ம்யுபாயத்வதீபம்</u>** எனும் க்ரந்தம் நூற்றிருபது வருடங்களுக்கு முன் தெலுங்கு லிபியில் அச்சாகியிருந்தது. நம் ஸ்ரீமடத்தின் நூலகத்தில் மிக சில ப்ரதிகளேயிருந்தன, அதுவும் மிகவும் கிழிந்தும், அக்ஷரங்கள் மங்கியும் இருந்தன. பிராட்டியின் उपायत्वांशத்தில் பூர்வபக்ஷிகளின் ஆக்ஷேபங்களுக்கு ஸ்ரீஸ்ரீநிவாஸபரகால ஸ்வாமி பல ப்ரகாரமாய் தர்க்க, வ்யாகரண, மீமாம்ஸா மற்றும் வேதாந்த ரீதியில் ஸமாதானம் ஸாதித்திருக்கும் மிக ஆச்சர்யமான க்ரந்தம் இது. இக்க்ரந்தத்தின் महत्वத்தை அடியோங்களுக்கு விளக்கிய ஸமயம் இதில் ஸ்ரீபரகாலஸ்வாமி காட்டியருளிய பல ப்ரமாணங்களை விளக்கி, ப்ரமாணங்கள் எங்கிருந்து உதாஹரிக்கப்பட்டுள்ளன என்பதை பட்டியலிட்டு அருளினார். இப்படிப்பட்ட சீரிய இந்த க்ரந்தத்தை ஸம்ரக்ஷிக்க வேணும் என்றும், இதை நன்கு ப்ரசாரப்படுத்த வேண்டும், ஓரளவு ஸம்ப்ரதாய ஜ்ஞானமுள்ளாரும் இதை அநுபவித்து பயன அடைய வேண்டும் என்றும் கருணையால் திருவுள்ளப்பட்டு நம் ஸ்வாமி, இப்பொறுப்பை

ஸ்ரீ.உ.வே.பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமியிடம் ஒப்படைத்தாயிற்று. ஸ்ரீஹயக்ரீவன் மற்றும் ஸ்ரீஸ்வாமிகளின் அநுக்ரஹத்தால், இக்க்ரந்தம் ஸ்ரீ.உ.வே.பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி அருளிய விரிவான தமிழ் உரையுடன் நம் ஸ்வாமியின் ஸதாபிஷேக மஹோத்ஸவத்தின் சிகரமாக வெளிவருகின்றது.

இது போல் இன்னும் பல பூர்வாசார்ய க்ரந்தங்களில் உள்ள அரிய விஷயங்களை கூறி சிஷ்யர்களுக்கு **ग्रन्थरुचि** ஏற்படுத்தியும், பழமையான க்ரந்தங்களை **प्रकाश**ப்படுத்தியும், அவைகளை பாதுகாத்தும், அவைகளை ப்ரசுரிப்பித்தும் நமக்கெல்லாம் அநுக்ரஹித்து வருகிறார்.

இது போன்று எத்தனையோ அநுபவங்களை நாம் அனைவரும் அநவரதம் பார்த்தும் , கேட்டும், மகிழ்ந்தும் வருகிறோம். அடியேன் இங்கே பகிர்ந்த அநுபவங்களில் குறைகளை பெரியோர்கள் க்ஷமிக்க ப்ரார்த்திக்கிறேன்.

இப்படி பல ஸந்தர்ப்பங்களில் அடியேனை பல விதமாக அநுக்ரஹித்த ஸ்ரீஸ்வாமியின் திருவடிகளில் அநந்த ப்ரணாமங்களை செய்து ஸ்வாமியின் க்ருபைக்கு மேலும் பாத்ரனாக ஸ்வாமியே அநுக்ரஹிக்க வேணுமாய் ப்ரார்த்தித்து நிற்கிறேன்.

தாஸன்,
புதுச்சேரி தட்டை ஸுதர்ஶனன்